விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (03.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

MADRAS CEMENTS LTD
ரா ம் கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மனித உரிமைகளைப் பேணுவதில் இலங்கை அரசு உதாசீனம்

## மனித உரிமை கண்காணிப்பகம் மீண்டும் அதிருப்தி

(ஜெனிவா)



மனிதவுரிமை மீறல்கள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தல் என்பவற்றில் இலங்கை அரசாங்கத்தின் பதில்கள் அதிருப்தி அளிப்பதாக மனிதவுரிமை கண்காணிப்பகம் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்களிற்கு தனிமாநிலம்–சுவாமி

(திருச்சி)

இலங்கையில் நான் தமிழர்களுக்கு தனி மாநிலம் வாங்கித் தருவேன். அது என்னால்தான் முடியும். வெறும் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கும் இங்குள்ளவர்களால் முடியாது என ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடைபெறும் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் மாநாட்டுக்கு வந்திருந்த ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி, செய்தியாளர்களைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். சந்திப்பின்போது அவர்,

நான் இலங்கை சென்று அந்நாட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துவிட்டு வந்தேன். தமிழர்களுக்கு தனி மாநில சுயாட்சிக்காக நான் ராஜபக்ஷவை வலியுறுத்தி வருகிறேன்.

அது என்னால்தான் முடியும் வெறும் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கும் இங்குள்ளவர்களால் முடியாது. ராஜபக்ஷவை வலியுறுத்தி தமிழர்களுக்கு தனி மாநிலம் நான் வாங்கித் தருவேன் என்றார் செய்தியாளர்களிடம். (செ–11)

## ஜெனிவாவை வெற்றி கொள்ள அரசிடம் திட்டமில்லை - கிரியல்ல



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் எவ்வித திட்டங்களும் இன்றி செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

ஜெனிவா சவால்களை வெற்றி கொள்வது தொடர்பில் அரசாங்கம் எவ்வித திட்டங்களையும் அமுல் படுத்தவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் அமைச்சர் மகிந்த சமரசிங்க இம்முறை ஆற்றிய உரை, கடந்த தடவை ஆற்றிய உரைக்கு நிகரானது.

புதிதாக எதனையும் தெரிவிக்கவில்லை. மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து எவ்வித ஆயத்தங்களும் உரிய முறையில் செய்யப்படவில்லை.

கடத்தல்கள், காணாமல் போதல்கள், ஊடக அடக்குமுறைகள், ஆயுதக்குழுக்கள், அரசியல் தீர்வுத்திட்டம், 17-ம் திருத்தச் சட்ட ரத்து, சட்டம் ஒழுங்கு சீர்குலைதல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சர் மகிந்த சமரசிங்க, வீதி அபிவிருத்தி, பாலம் அமைத்தல் போன்ற பொருத்தமற்ற பதில்களை அளித்துள்ளார்.

கடந்த அமர்வுகளில் பெரும் எண்ணிக் (24ஆம் பக்கம் பார்க்க)

## நீரில் மூழ்கி இரு சிறுவர்கள் பலி

(யாழ்ப்பாணம்)

கோவில் கேணிக்குள் இருந்து சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் யாழ்.சுதுமலை அம்மன் கோவிற்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வியிலும் ஆனைக்கோட்டை 4ஆம்கட்டையைச்சேர்ந்த ஜேசுபாலன் சயந்தன் (வயது 08) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் உரிமை மாநாடு ஜெனிவாவில் நேற்று ஆரம்பம்

(ஜெனிவா)

இலங்கைத் தீவில் இடம்பெற்ற இன அழிப்பின் சம்பவத்தை விளக்கமளிக்கும் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழர் உரிமை மகாநாடு நேற்று ஜெனிவா நகரில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் இலங்கையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், சி.சிறிதரன் மற்றும்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், மணிவண்ணன் உட்பட, கனடா பாராளுமன்ற உறுப்பினர், தென்னாபிரிக்க அமைச்சர், நோர்வே பாராளுமன்ற உறுப்பினர், மொறிசியஸ் பிரதிநிதிகள், இந்திய நாட்டின் சார்பில் டாக்டர் கிருஸ்ணமூர்த்தி நடராஜன், கம்யூனிஸ்ட் கட்சியின் தா.பாண்டி (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் உறுப்புரிமையை இடைநிறுத்த வேண்டும் - ஜிப்ரி

(லண்டன்)

பொது நலவாய நாடுகள் அமைப்பு உறுப்புரிமையிலிருந்து இலங்கை இடைநிறுத்தப்பட வேண்டுமென பிரித்தானியா சட்டத் தரணிகள் பேரவை உறுப்பினர் ஜிப்ரி ரொபர்ட்சன் கோரியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமர்வுகளில் பிரித்தானிய மகாராணி கலந்து கொள்ளக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தி நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றி முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கிய காரணத்தினால் இவ்வாறு பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை நிலைநாட்ட முயற்சித்த பிரதம (24ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டுப் பூங்கா இனி சங்கிலியன் பூங்கா!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிட்டுப்பூங்கா சங்கிலியன் பூங்கா என்ற பெயரில் 8 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இவ்புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ் மாநகர சபையில் நடைபெற்றது.

தற்போது காணப்படும் பூங்கா அமைப்பு இடிக்கப்பட்டு நவீன முறையில் குறித்த பூங்கா புனரமைக்கப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது குறித்த பூங்கா புனரமைப்பின் வேலைத்திட்டங்கள் கணனி வடிவமைப்பு மூலம் திரையிட்டும் காட்டப்பட்டது.

இத்திட்ட வரைபடத்தினை தென்னிலங்கையினைச் சேர்ந்த கட்டிட நிபுணர்கள் உருவாக்கி கணனியில் திரையிட்டு காட்டியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சமயம், கலா சாரம் சார்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்ததோடு கருத்துக்களினையும் முன்வைத்திருந்தனர். (செ–11)

## 2012 தீர்மானத்தை நகர்த்தவே இலங்கை மீது புதிய தீர்மானம்

(வாஷிங்டன்)

### அமெரிக்கா விளக்கம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 2012ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நகர்த்தும் வகையிலேயே புதியதீர்மானம் கொண்டுவரப்படவிருக்கின்றது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாஷிங்டனில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் பற்றிக் வென்ட்ரெல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2012இல் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இருந்து எவ்வாறு வேறுபட்டது என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைவரத்தை இந்தியா கவனிக்கிறது

(சென்னை)

இலங்கையில் தற்போதுள்ள நிலைவரத்தை மத்திய அரசு கவனமுடன் கண்காணித்து வருவதாகவும், அங்குள்ள தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மத்திய இணை அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலக விவகாரத் துறை இணை அமைச்சர் நாராயணசாமி, சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசுக்கு எதிராக இந்திய அரசு இதுவரை எந்த முடிபினையும் எடுக்க வில்லை. ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்தியா முடிபு செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார். (செ–11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஏ9 பாதையைத் திறந்தது மட்டுமே அரசின் பரிந்துரை நிறைவேற்றம்!

## இதுதான் உண்மை என்கிறார் மனோ



இலங்கை அரசாங்கம், தனது நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளில் ,ஏ9 நெடுஞ்சாலையைத் திறந்து விடவேண்டும் என்ற ஒரேயொரு பரிந்துரையை மட்டுமே இது வரையில் நிறைவேறியுள்ளது.

ஏனைய பல பரிந்துரைகளைத் தொட்டும் பார்க்கவில்லை சிலவற்றை மேலோட்டமாக பார்த்துள்ளது. இது தான் உண்மை.

இந்த நிலையில் தான், எதுவும் எங்களுக்கு சொல்லித்தரவும் வேண்டாம், கற்றுத்தரவும் வேண்டாம். எங்களுக்கு நேரமும், அவகாசமும் மாத்திரம் தாருங்கள் என்று எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற அடிப்படையிலான இறுமாப்பான உரையை இலங்கை அரசாங்க பிரதிநிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க மனித உரிமை ஆணைக்குழுவில் ஆற்றியுள்ளார். அவரது பேச்சின் உள்ளடக்கம் இதைத்தான் கூறுகிறது.

இதுதான் ஐ.நா சபைக்கும் உலகத்திற்கும் இலங்கை அரசாங்கம் அனுப்பியுள்ள செய்தி. இது இலங்கையிலே தமிழ் மக்களிடம், நீங்கள் ஐ.நாவிற்கும், உலகத்துக்கும் சென்று முறையீடு செய்யாதீர்கள் என்று சொல்லப்படும் செய்தியின் மறுபக்கம்.

இந்த இரண்டுமே கேட்டு, சலித்துப்போன பழைய பஞ்சாங்க பல்லவி என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐ.நாவில் அரசாங்க பிரதிநிதி குழுவின் தலைவர் மகிந்த சமரசிங்க ஆற்றியுள்ள அரசாங்கத்தின் ஐ.நா கொள்கை உரை தொடர்பாக கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

கடந்த முறையும் இதே ரைம் அண்ட் ஸ்பேஸ் என்ற நேரமும், அவகாசமும் என்ற கோரிக்கை தான் முன்வைக்கப்பட்டது. இந்த முறையும் அது தான்.

ஆனால் கடந்தமுறை, கற்றுக்கொண்ட ஆணைக்குழு பரிந்துரைகளில் ஐம்பது விகிதத்தை தாம் நிறைவேற்றிவிட்டதாகவும், மிகுதி ஐம்பது விகிதத்தை நிறைவேற்றவே நேரமும், அவகாசமும் தாருங்கள் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. இதை மகிந்த சமரசிங்க, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் அன்றைய அமைச்சரவை சட்ட ஆலோசகர் மொஹறான் பீரிஸ் ஆகியோர் கூட்டாக சொன்னார்கள். இதுதான் உண்மைக்கு புறம்பான அப்பட்டமானகூற்று என அப்போதே சொன்னோம்.

ஐ.நா சபையில் எதையாவது சொல்லி விட்டு திரும்பி வாருங்கள்.பிறகு அடுத்த சந்தர்ப்பம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்பது தான் ஐ.நா தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நிரந்தரக் கொள்கை. ஆனால், அந்த அடுத்த சந்தர்ப்பம் மீண்டும் இன்று வந்து விட்ட நிலையில், இன்று மீண்டும் அதே கோரிக்கையை மகிந்த சமரசிங்க முன்வைத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம்,ஏ9 நெடுஞ்சாலையை திறந்து விட வேண்டும் என்ற ஒரேயொரு கற்றுக்கொண்ட ஆணைக்குழு பரிந்துரையை மட்டுமே இதுவரையில் நிறைவேறியுள்ளது. உண்மையில் கற்றுக்கொண்ட ஆணைக்குழு அறிக்கை வெளிவரும் முன்னரே இந்த ஏ9 பாதை ஏறக்குறைய திறந்துவிடப்பட்டிருந்தது. இன்றுஅது புரனமைக்கப்பட்டுள்ளது. இந்த பாதை திறப்பு அரசாங்கத்திற்கு அரசியல் இராணுவ ரீதியாக தேவையாக இருக்கிறது.

இதைத்தவிர ஏனைய கற்றுக்கொண்ட ஆணைக்குழு பரிந்துரைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருப்போர், காணாமல்போனோர், சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தலையீடு, திட்டமிட்ட குடியேற்றம், தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு உட்பட பல முக்கியமான பரிந்துரைகளைப் தொட்டும் பார்க்கவில்லை. சிலவற்றை மேலோட்டமாக பார்த்துள்ளது. இது தான் உண்மை .இந்த நிலையில் மகிந்த சமரசிங்கவின் ஐ.நா உரையை உலகம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.(செ-11)

## முழுநேரக் கல்வி டிப்ளோமா 5-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முழுநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி நாளை மறுதினம் 5-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

காலை 9 மணிக்கு இக்கற்கை நெறி ஆரம்பமாகுமென யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் தெரிவித்தார். (ந)





### வீடு விற்பனைக்கு

கண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0776181216

(2058)



### அவசியம் தேவை

ஸ்ரீ ராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

சேவாச்சிரமத்திலிருந்து வெளி வேலைகளுக்கும் ( வங்கி முதலியன) பகலில் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கும் 40வயதிற்கு மேற்பட்ட ஒருவருக்கும் இங்கு வேலை வெற்றிடமாக உள்ளது. இதற்கு முன்பு பல வருடங்களாக எம்மிடத்தில் பணிபுரிந்தவருக்கு நாளாந்த கொடுப்பனவை விட கீழ்க்காணும் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளோம்.

1. இவரது இல்லத்திற்கு மின்சார இணைப்பு ரூபா 50,000 .
2. டாக்டர் சந்திரகுமாரால் செய்யப்பட்ட சத்திரசிகிச்சைக்கு ரூபா 20,000 inclusive of post surgery.
3. கல்வி நிவாரணம் Commercial Bank வைப்புத் தொகை 5,000 இதனால் இவரது மகளுக்கு ரூபா 10,000இவ் வங்கி வழங்கியுள்ளது.
4. இருந்து படிப்பதற்கு மேசை ,கதிரைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் சீருடை முதலியன 15,000.

இவருக்கு முன் வேலை செய்தவருக்கு முறிகாயம் ஏற்பட்டமைக்கு சேவாச்சிரம வாகனத்தின் மூலம் சிகிச்சை வழங்கியமைக்கு ரூபா. 25,000 செலவளித்துள்ளோம்.

**முக்கிய குறிப்பு:** சேவாச்சிரமம் முழுமையாக இயங்கும் ஒரு ஆத்மீக ஸ்தாபனம். இங்கு பணிபுரியும் கார் சாரதிக்கும் சம்பளத்தை விட மேலதிகமான பணம் அவருக்கு life Insurance இதற்கும் முடிந்தளவில் உதவி செய்து வருகின்றோம்.

அன்னையின் இவ் ஸ்தாபனம் சிறிதேனும் Profit motive அறவே கிடையாது. சேவாச்சிரமம் வன்னியில் தமது பணியை அன்னையின் பெயரால் 2010-ல்ஆரம்பித்து தற்பொழுதும் நடைபெற்ற வண்ணம் உள்ளது.

இறைபணியில்
அன்புள்ள அன்னையின் அடியவன்.

(சி-2574)



### YOU WANT TO BE A DOCTOR

**MD / MBBS DEGREE PROGRAMME**

MEDIUM - ENGLISH, IELTS NO NEED

QUALIFICATION- G.C.E A/L BIOLOGY, PHYSICS, CHEMISTRY

DURATION- 5 YEARS./ TRANSFER STUDENT FROM B.Sc DEGREE PROGRAME ONLY FOUR YEARS

COMMENCEMENT DATE- 01 JUNE 2013 / 01 SEPT 2013 (LIMITED SEAT....)

RECOGNIZED BY: -SLMC, WHO,UNESCO,GMC

COUNTRIES- UNITED STATES, CANADA, UNITED KINGDOM,EUROPE, SRILANKA, SINGAPORE

மேற்குறிப்பிட்ட MD / MBBS DEGREE PROGRAMME NORTH AMERICAவில் அமைந்துள்ள DOMINICAN REPUBLIC என்னும் நாட்டில் உள்ள ALL SAINTS UNIVERSITY ல் இரண்டு அரை( 2 1/2 YEARS) ஆண்டுகள் கல்வி கற்பதுடன் மிகுதி இரண்டு அரை ( 2 1/2 YEARS) ஆண்டுகள் AMERICA வில் கல்வி கற்க வேண்டும். மொத்தமாக ஐந்து ஆண்டுகள் (FIVE YEARS) கல்வி கற்ற பின்பு நீங்கள் AMERICAவில் DOCTORஆக வேலை பார்ப்ப தற்குரிய WORK PERMIT மூன்று ஆண்டுகளுக்கு (3 YEARS) பெற்றுக் கொடுக்கப்படும். அதனை தொடர்ந்து AMERICAவில் நிரந்தர குடியுரிமை பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: CANADA, AMERICA, LONDON போன்ற நாடுகளில் இருந்து இலங்கை மாணவர்கள் பலர் இங்கு கல்வி கற்று வருகிறார்கள்.

**RAINBOW TRAVELS**

30/2, THIRD LANE
POWER HOUSE ROAD,
JAFFNA.
TEL: 0212219596, 0778710732

113, CHATHAM ST,
COLOMBO- 1
TEL: 2321074

(HOTLINE - 0778980652)

(C-2572)



### ஓராண்டு நினைவஞ்சலி

03.03.2013

அமரர்
செல்லையா
ஸ்ரீவிஷயம்



பிறப்பு 13 03 1952
இறப்பு 20 11 2012

இளகிய புன்சிரிப்பு இதயம் நனைக்கும்
செவ்விய பார்வை
சீர்மையைச் சொல்லும் - இப்படி
பக்குவ குணங்கள் பலதும் கொண்ட
நல் உறவை நாம் இழந்து நிற்கின்றோம்.

-குடும்பத்தினர்

NEC கல்வி நிலையம் அருகாமை,
ஆனந்தபுரம் மேற்கு,
கிளிநொச்சி.

(சி-2570)



### கண்ணீர் அஞ்சலி

**திருமதி இராசலட்சுமி சிவபுரனாதன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருடன் துயர் பகிர்வதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

விநாயக புராணம் ஓதும் அடியார்கள்
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
பழம் வீதி, கந்தர்மடம்.

(2055)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்குவிசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி(ஏ.ஆர்.வி.) ஏற்றும் நடவடிக்கைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை வரையான கிழமை நாட்களில் ஒவ்வொரு பகுதியிலும் இடம் பெறவுள்ளது என யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி அ.எ.ஞானசோதி அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரையும் சுவாமியார் வீதியிலுள்ள ஆரம்ப பராமரிப்பு சிகிச்சை நிலையத்திலும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரையும் வளன்புரம் பொன்மணிக் களஞ்சியத்திலும் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரையும் மகேந்திரபுரம் மிக்கேல் சம்மனசு நிலையத்திலும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரையும் நெடுங்குளம் பாலர் பாடசாலையிலும் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரையும் வசந்தபுரத்திலும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரையும் கொழும்புத்துறை சனசமூக நிலையத்திலும் ஊசியேற்றும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரையும் ஏ.வி.வீதியில் உள்ள புனித மரியன்னை தேவாலயத்திலும் முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரையும் இலந்தைக்குளம் வீதி புளியடியிலும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரையிலும் பாசையூர் புதுக்குடியிருப்பிலும் முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரையிலும் பாசையூர் மகப்பேற்று நிலையத்திலும் 13 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 11 மணிவரையும் கொய்யாத் தோட்டம் பார்க்குளம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரையும் விதானையார் வீதியில் அமைந்துள்ள வைரவர் கோவிலிலும் தொடர்ந்து 14 ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரையும் சுண்டிக்குளி சனசமூக நிலையத்திலும் ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

எனவே, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அனைவரும் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு மேலும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-5)

# உருத்திரபுரீசுவரத்தில் சிவராத்திரி விழா

கிளிநொச்சியில் உருத்திரபுரீசுவரத்தில் சிவராத்திரி விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அறங்காவல் சபை எடுத்து வருகின்றது. பாற்செம்பு எடுத்தல், பாற்காவடி எடுத்தல் நிகழ்வுகளில் பல பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, உருத்திரபுரம் மகா வித்தியாலயம், சிவநகர் மகா வித்தியாலய மாணவர்களதும் மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல மாணவர்களதும் இசைக்கச்சேரிகளும் கவியரங்குகளும் நாடகங்களும் மரபுவழிக்கூத்துக்களும் இடம்பெறும்.

சிவராத்திரி விழாவையொட்டி கிளிநொச்சி இந்துக்கல்லூரி, உருத்திரபுரம் மகாவித்தியாலய மாணவர்களும் சிவநகர் மகாவித்தியாலய மாணவர்களும் பொது மக்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருவதாக ஆலயத் தலைவர் தி. இராசநாயகம் அறிவித்துள்ளார். (அ)

# பொதுமருத்துவமனையில் சுடுநீர் பெறமுடியவில்லை

கிளிநொச்சி பொது மருத்துவமனையின் தேநீர்ச்சாலையில் சுடுநீர் கிடைப்பதில்லை என நோயாளர்களும் அவர்களைப் பராமரிப்பவர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலை அமைந்துள்ள இடத்திற்கும் ஏ-9 வீதியில் உள்ள தேநீர்க்கடைகளுக்கும் இடையே நீண்ட தூரமாக இருப்பதால் அங்கு சென்று சுடுநீர் பெற்றுவருவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே நோயாளர்களினதும் அவர்களைப் பராமரிப்போரினதும் நலன்களை கவனத்தில் கொண்டு மருத்துவமனை தேநீர்ச்சாலையில் சுடுநீர் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நோயாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-254)

# வாரம் ஒரு தகவல்

## பொய்யும் நன்மை செய்யும்

"புரை தீர்க்க நன்மை பயக்கின்
பொய்மையும் வாய்மையிடத்து"-வல்லுவர் வாக்கு

அரியணை மீது அமர்ந்திருக்கும் மன்னர் முன்னால் குற்றம் புரிந்த ஒருவனை கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

அவன் வேறு நாட்டைச் சேர்ந்த வேற்று மொழியினத்தவன்.

அவனது குற்றத்தை விசாரணை செய்த அரசன் அவனின் குற்றத்திற்கு தூக்குத்தண்டனை வழங்குமாறு கட்டளை இட்டான்.

இத்தண்டனை அறிவிப்பை கேட்டதும் அக்குற்றவாளி அரசனை தனது மொழியில் அவதூறாக திட்டினான். எனினும் அரசிற்கு எதுவும் புரியவில்லை.

உடனே அரசர் அமைச்சரை அருகில் அழைத்து "இவன் என்ன சொல்கிறான்?" என்று கேட்டார்.

ஒரு கணம் சிந்தித்த அமைச்சர் "அரசே அவன் கோபத்தை அடக்கி பிறரை மன்னிப்பவர்க்கே சொர்க்கம் உண்டு என்கின்றான்" என்று பதிலுரைத்தான்.

உடனே அரசரும் சிந்தித்துப்பார்த்தார். பின்னர் "இவனுக்கு நான் கொடுத்த தண்டனையை தள்ளுபடி செய்கிறேன். இவனை மன்னித்து விடுதலை செய்கிறேன்" என அறிவித்தான்.

இப்போது அருகில் நின்று கொண்டிருந்த வேறொரு அமைச்சரிற்கு பொறுக்க முடியவில்லை.

அவர் அரசனை நெருங்கி உண்மையை சொன்னான். "அரசே! அந்த அமைச்சர் கூறியது பொய். உண்மையிலேயே அக்குற்றவாளி அந்நிய மொழியில் தங்களை திட்டினான்" என்று விளக்கினான்.

அரசர் இப்படியாக உண்மை கூறிய அமைச்சரை புன்னகையோடு பார்த்தார். "அமைச்சரே நீங்கள் கூறிய உண்மையை விட அந்த அமைச்சர் கூறிய பொய் எனக்கு மகிழ்ச்சி தருகிறது" என்றான்.

உண்மை கூறிய அமைச்சர் உறைந்து போய் நின்றார். தொடர்ந்து அரசர் "சமாதானத்தை உண்டாக்கும் பொய் பிரச்சினைகளை உண்டாக்கும் மெய்யை விட மேலானது" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

03.03.2013
(மாசி 19, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 7.04 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.50 மணிவரை
இராகுகாலம் 4.56-6.26 மணிவரை
சுபநேரம் 9.26-10.36 மணிவரை

**மேடம்** புகழ் கூடும் நாள், சான்றோர் சந்திப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும், விருப்பங்கள் நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** தன்னம்பிக்கையும் உற்சாகமும் அதிகரிக்கும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவிற்கு வரலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**மிதுனம்** தொழில் நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வ புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், கல்வியில் மேன்மையுண்டு.

**சிங்கம்** அன்பு நண்பர்கள் சந்திப்புண்டு, குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சகோதர ஒற்றுமை பலப்படும், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** வருமானத்தை அதிகரிக்க தகுந்த முயற்சிகள் எடுப்பீர்கள், நண்பர்கள் ஆதரவுதர முன்வருவர், தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், திருமண வாய்ப்புக்கள் கைகூடும்.

**துலாம்** பக்கபலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பிள்ளைகளுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, காரிய அலைச்சல்களில் மனச்சோர்வு ஏற்படலாம்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைத்து மகிழும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், இஷ்ட சித்தியுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மகரம்** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவுபிறக்கும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் சில தாமதம் ஏற்படலாம், பக்கபலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மீனம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கௌரவக் குறைவான நாள், உடல் நலனில் கவனம் தேவை, வீண் தொல்லைகள் ஏற்பட்டு மனதில் உறக்கம் குறையும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 110 | 120 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 50-70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 220 | 220 | 250 | 250 |
| தக்காளி | 100 | 100 | 140 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 60 | 60 | 80 |
| கரட் | 150 | 110 | 160 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 30-70 | 60 | 70-80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 170 | 140 | 160 | 160 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 130 |
| பீற்றூட் | 80 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 110 | 120 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 60 | -- | -- |
| போஞ்சி | 150 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 20 | 30 |
| தேசிக்காய் | 20 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 110 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 140 | 160 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணி சந்தி ஊடான ஆழியவளைக்கு செல்லும் பிரதான வீதி நேற்று முன்தினம் திறப்பு

வடமராட்சி மருதங்கேணி சந்தியிலிருந்து ஆழியவளை செல்லும் பிரதான வீதி பல வருடங்களுக்கு பின் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் யுத்த காலத்தில் இவ்வீதி மூடப்பட்டிருந்தது. இதனை அடுத்து 2006 ஆம் ஆண்டு முதல் இவ்வீதி மூடப்பட்டமையால் மக்கள் இவ்வீதியால் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் பல சிரமங்கள்ள எதிர்கொண்டனர்.

இதனையடுத்து வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் மிக முக்கிய வீதியாகவும் இவ்வீதியே விளங்கியது.

இதனால் நேற்று முன்தின் இடம்பெற்ற வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்வீதியை தாம் திறந்து விடுவதாக இராணுவத்தினர் தெரிவித்ததுடன் அன்றைய தினமே வீதியை திறந்து வைத்தனர்.

இதனால் அப்பகுதி மக்கள் தற்பொழுது தமது பயணங்களை இலகுவாக மேற்கொண்டு வருகின்றன. (அ-3-24)



நன்றி: ஐலண்ட்

## ஓய்வூதியர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் 5 ஆவது பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இலங்கை வங்கியின் வட மாகாணக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் என்.சிவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கியின் வடபிராந்திய பொது முகாமையார் கே.ஈ.டி.சுமணசிறி, மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## இலவச ஆங்கில வகுப்பு

(பருத்தித்துறை)

தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டு கழகம் கிராம இளைஞர்களின் முன்னேற்றத்தை கருதி இலவச ஆங்கில வகுப்பை நடத்தவுள்ளது.

இம்மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கில வகுப்பில் கலந்து கொண்டு கல்வி கற்க விரும்புவர்கள் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய நூலகர் க.ஆறுமுகத்துடன் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்ய வெண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-10)

## கைவிடப்பட்ட மீன்பிடிப் படகுகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்

**55 ஆவது படைப்பிரிவு அதிகாரி உறுதி**

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் யுத்த காலத்தில் மக்களால் சுண்டிக்குளப் பகுதியில் கைவிடப்பட்ட மீன்பிடிப் படகுகளை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்க இராணுவத்தினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் 55 ஆவது படைப் பிரிவு அதிகாரிகளினால் உறுதியளிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் 2006 ஆம் ஆண்டு யுத்தகாலத்தில் சுண்டிக்குள் பகுதியில் படகுகளை விட்டுவிட்டு வன்னிக்கு சென்ற மீனவர்களின் படகுகளே இவ்வாறு இராணுவத்தினரால் மீட்கப்பட்டன.

படகுகளை மீட்ட இராணுவத்தினர் இத்தனை காலமும் பாதுகாத்து தற்பொழுது உரி யவர்களிடம் ஒப்படைக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

அக்காலப் பகுதியில் படகுகளை தவறவிட்ட படகு உரிமையாளர்கள் இராணுவத் தின் உதவியுடன் தமது படகுகளை அடை யாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-3-24)

## முனியப்பர் வசந்தம் இறுவெட்டு வெளியீடு

(புன்னாலைக்கட்டுவன்)

குப்பிளான் தெற்கு அருள்மிகு முனியப் பர் ஆலய வரலாற்றுப்பாடல்கள் அடங்கிய இறுவெட்டு வெளியீடு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய பரி பாலன சபைத்தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன், மகேஸ்வரக் குருக்கள், ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் கி.வி.கிருஷ்ணசாமி, சிறப்பு விருந்தி னர்களாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் ஏ.அனுசாந்தன், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் இ.அரி கரன், குப்பிளான் தெற்கு ஜே/210 பிரிவு கிராம அலுவலர் எஸ்.பி.மயூரன், ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.சின்னரசா, குப்பிளான் தெற்கு கிராம அபி விருத்திச் சங்கத் தலைவர் நா.கணேசலிங்கம், கொத்தணிகள் அனைத்து ப.தெ.வ அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் முகாமையாளர்கள், தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-78)

## வாக்குரிமைகளின் அடிப்படையில் வேலைத்திட்டங்கள் நடைமுறைக்கு

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட புதிய வேலைத்திட்டங்கள் வாக்குரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் கிராம ரீதியாக இடம்பெற்ற வாக்குகள் அடிப்படையில் சில வேலைத்திட்டங்களும் ஏனையவை பிரதேச சபையின் வேலைத்திட்டங்களின் கீழும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் புறநெகும திட்டத்தின் கீழ் நுகவில் வாய்க்கால் திருத்தம், சண்டிக்குளம் அணைக்கட்டு வீதியமைத்தல், நெல்லியடி சந்தை கடைகள் அமைத்தல், ஆலடி வைரவர் மாயக்கை குளம் வரையிலான வீதி புனரமைத்தல், வல்வெட்டி இ.த.க. பாடசாலை வீதி, கலட்டி பிள்ளையார் வீதி புனரமைப்பு, வேரோடை கொல்களம் அமைத்தல், பி.எஸ்.டி.ஜி. செல்வாபுரம் குடிநீர் விநியோகம் போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் சில வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருவதுடன் ஏனையவை மிகவிரைவில் புனரமைத்து நிர்மாணிக்கப்படவுள்ளன. (அ-3-24)

## மரண அறிவித்தல்

### திருமதி யேசுதாசன் மேரிகமலா



4-ம் கட்டை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுதாசன் மேரி கமலா (றாஜி) 02.03.2013 அன்று காலமானார். இவர் ஞானப்பிரகாசம் யேசுதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிலுவைராசா, திருமதி மொனிக்கம்மா (லில்லி) ஆகியோரின் பாசமிகு மகளும், திரு.திருமதி ஞானப்பிரகாசம் பிலோமினா ஆகியோரின் அன்பு மருமகளும், மேரி இமெல்டா (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), பெனடிற்தாஸ் (ஐங்கரன் மோட்டோர்ஸ்), ஜீவராஜ் (ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு. அல்மினஸ் சுரேனின் (வலம்புரி விளம்பர முகாமையாளர்) பாசமிகு மாமியும், டெனிஸ் (கனடா) ரவி, றமேஸ் (இத்தாலி), காலச்சென்ற றாஜன், மற்றும் றெஜி வின்சன்றாஜ் (ஆசிரியர் யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் RCTMS ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றமணி (கனடா), தவம் (சிங்கப்பூர் ), மரியறீற்றா (இத்தாலி), அமிர்தசெல்வன், அனுஸ்ரி (ஆசிரியர் - புங்குடுதீவு ), அன்னறீற்றா, (இத்தாலி), திரேசம்மா, காலஞ்சென்ற மரியராணி மற்றும் நிர்மலா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சிரோனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிவழிபாடுகளின் பின் புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:* கணவன் (ஞா.யேசுதாசன்),
பிள்ளைகள், மருமகன்.

(சி-2575)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு பேரம்பலம்

தென்மராட்சி மீசாலையைப் பிறப்பிடமாகவும், கலவெட்டித்திடல் புளியம்பொக்கணையை வதிவிடமாகவும், நாகதம்பிரான் அரிசி ஆலை, புளியம்பொக்கணைச் சந்தி என்ற முகவரியில் வசித்து வந்தவருமாகிய சின்னப்பு பேரம்பலம் அவர்கள் 01.03.2013 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் அமரர்கள் சின்னப்பு மாணிக்கம் குடும்பத்தினரின் அன்பு மகனும், அமரர்கள் கணபதிப்பிள்ளை செல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும் அன்னலட்சுமி, ஜெயலஷ்சுமி(அமரர்) சகோதரிகள் பாசமிகு கணவரும், பொன்னம்மா, அமரர் பொன்னுத்துரை, ஐயாத்துரை, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயானி, சாந்தினி, சிறீதரன்(சிறீ), அமரர் சிறீரஞ்சனி, சிறிகாந்தா, நந்தினி, சுதாகரன்,சிறீரஞ்சன், குமுதினி அமரர் கஜமுகா, கோமதி, பவானி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கணபதிப் பிள்ளை சிதம்பரநாதன், ஜெயமோகனா, மதிவக்சலா, விவேகானந்ததுரை, சியாமளா, மனோசினி, விசயசாந்தன், டினேஸ்குமார், முரளி ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் வைத்திலிங்கம் அமரர் செல்லம்மா, அமரர் திருச்செல்வம், அமரர் அருட்செல்வம், அமரர் பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் மகன் சிறீதரன் அவர்களின் இல்லத்தில் 03.03.2013 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று,தகனக்கிரிகைக்காக பிற்பகல் 2 மணி அளவில் கலவெட்டித்திடல் நெடுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பே.சிறீதரன்
நாகதம்பிரான் அரிசி ஆலை
புளியம்பொக்கணைச் சந்தி.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-2576)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும்
ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட

## செல்லப்பா சுப்பிரமணியம்

அவர்களின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லப்பா சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**தோற்றம்:**
30.11.1928

**மறைவு:**
13.03.2012

**திதி:**
3 பங்குனி 2013

எங்கள் வாழ்வே உங்கள் வாழ்வென
என்றென்றும் எண்ணி வாழ்ந்து எம்
உள்ளத்தில் குடிகொண்ட எங்கள் அப்பாவே...!

எம்மை ஆறாத துயரில் விட்டுச் சென்று
ஆண்டொன்றென்ன எத்தனை ஆண்டு சென்றாலும்
நாம் இந்த வையகத்தில் வாழும் வரை
ஆறாது எம் துயர்
அழியாது உங்கள் புகழ்!!!

இல.33, மாகியப்புல வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை

**தகவல்:**
உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

வலம்புரி Graphics (2059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

✉ அன்பின் வியாசர்! நச்சென்று ஒரு காதல் கவிதை சொல்லுங்களேன்?

✎ *தான் தொட்ட*
*கைவிரல்களைக் கேட்டாள்*
*வெட்டிக் கொடுத்தேன்*
*தன்னைப் பார்த்த*
*கண்களைக் கேட்டாள்*
*பிடுங்கிக் கொடுத்தேன்*
*தன்னை வைத்த*
*இதயத்தைக் கேட்டாள்*
*அது அவளிடம் இருப்பது அறியாமல்*

---

*அருண், குருநகர்*

✉ புயலுக்குப் பின்தான் பூகம்பம் என்கிறார்களே அப்படியென்றால் திருமணத்திற்குப் பின்?

✎ *நீரே பதிலைச் சொல்லிவிட்டு என்னிடம் பதில் கேட்கிறீரே!*

---

*சி.கோபுரன், கொக்குவில்*

✉ அடிக்கடி கோயிலை இடித்துக் கட்டலாமா?

✎ *குண்டு சட்டிக்குள் குதிரையோட்டுபவர்கள் இருக்கும் வரை அடிக்கடி அடிக்கல் நாட்டல்கள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.*

---

*மதீசன், திருநெல்வேலி*

✉ கோழியில் இருந்து முட்டை வந்ததா? முட்டையிலிருந்து கோழி வந்ததா?

✎ *கோழியில் இருந்து முட்டை வரும் But முட்டையில் இருந்து கோழி வராது குஞ்சுதான் வரும் Mr. மதீசன்.*

---

*க.நிறோஜலா, கரவெட்டி*

✉ அன்பின் வியாசகரே தற்போது முறைதலையற்ற காதல், வயது வேறுபட்ட காதல் உருவெடுத்துவிட்டதே அன்றைய காதல் சங்க காலம் என்றலால் தற்கால காதல்???

✎ *சங்ககாலக் காதலை எங்க காலத்திற்கு ஒப்பிடுறீரே!*

*தற்காலக் காதல்கள் காதல் என்றால் தானே சங்ககாலத்திற்கு ஒப்பிட முடியும். அது வெறும்....*

---

*க.சி.சதாசிவம், மட்டுவில்*

✉ தமிழர் பிரச்சினை எப்போது முடியும்?

✎ *அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.*

## கனவைப் பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?




*வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி*

✉ கனவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

✎ *நினைவில் முடியாத காரியங்களை கனவில் க்னகச்சிதமாய் முடித்துவிடலாம். கனவு நல்லது.*

## புயலுக்குப் பின்தான் பூகம்பம் என்கிறார்களே அப்படியென்றால் திருமணத்திற்குப் பின்?

*பரந்தாமன், கொய்யாத்தோட்டம்*

✉ துவிச்சக்கர வண்டியில் சமாந்தரமாகச் செல்லும் பெண்களை என்ன செய்யலாம்?

✎ *அவர்கள் சம உரிமையைத் தானே கேட்கிறார்கள்.*

---

*பொ. சாம்பகி, பருத்தித்துறை*

✉ அன்பின் அங்கிள்! தாங்கள் மிகவும் அழகென்று பிறவுண் வீதி, யாழ்ப்பாணப் பகுதியில் பெரும்பாலும் அனைவரும் பேசுகின்றார்கள். அதைப்பற்றி உங்களது கருத்து யாது?

✎ *நான் அப்பவும் சொன்னன் என் வீட்டுக் கண்ணாடி பொய் சொல்லாது எண்டு யாருமே நம்பலயே!*

---

*பொ.இளவரசி, பருத்தித்துறை*

✉ Hi! Handsome

பெண்களின் அழகு பாதாளம் வரை கொண்டு செல்லும் என்று பதில் கூறினீரே அப்போ உம்மைப் போன்ற ஆடவர்களின் அழகு எந்த லோகத்துக்கு கொண்டு செல்லும்?

✎ *அம்மா இளவரசி இந்திரலோகத் துக்குத்தானம்மா.*

---

*செ.ஜனனி, யாழ்ப்பாணம்*

✉ வியாசரே உங்களுக்கு அண்மையில் இடம்பெற்ற மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் கூறுங்களேன்?

✎ *துவிச்சக்கர வண்டிக்கு கெல்மட் போட்டுக் கொண்டு சென்று, பொலிஸாரைக் கண்டவுடன் லைசன்சைத் தேடி தடம்புரண்டதை மறக்க முடியுமா?*

### வாய்விட்டு சிரிச்சா நோய்விட்டு போகும்...

**புதிதாக வாங்கிய புடைவை ஒன்றை மனைவி கணவனிடம் காண்பிக்கிறாள்.**

**மனைவி:– என்னாங்க புடைவை எப்படி இருக்கு?**

**கணவன்:–நல்லாத்தான் இருக்கு ஆனா சரியான பாரமா இருக்கே?**

**சட்டென கோபம் கொண்ட மனைவி**

**மனைவி:–உங்களுக்கென்ன கட்டிக்கப் போறது நான்தானே!**


**பதற்றப்படாத கணவன்**

**கணவன்:– கட்டிக்கப் போறது நீதான் But துவைக்கப்போறது நானல்லவா...?**

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# பாலச்சந்திரனுக்காக மெரீனா கடற்கரையில் நினைவேந்தல் நிகழ்வு



இலங்கை இராணுவத்தால் பாலச்சந்திரன் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டது உலகெங்கும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சென்னை மெரீனா கடற்கரையில் மாபெரும் நினைவேந்தல் மற்றும் கண்டனக்கூட்டம் நடைபெற்றது.

மெழுகுதிரி ஏந்தி நடத்தப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பாலச்சந்திரனை படு கொலை செய்ததற்கு கடுமையான கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இதன்போது இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும். ஈழத் தமிழரிடையே பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். தமிழக சட்டமன்றம் முன்மொழிந்த இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடையை இந்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் மாணவர்கள் பெரும் திரளாக இலங்கைக்கு எதிராக போராட்டம் செய்யவுள்ளனர் என்று இக்கூட்டத்தில் மாணவர்கள் தெரிவித்தனர். (அ-2)

## ஹொக்கி சுற்றுப் போட்டி

இலங்கை பாடசாலைகளின் ஹொக்கி மன்றமும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஹொக்கி மன்றமும் இணைந்து நடத்தும் இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான ஹொக்கி சுற்றுப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 8 மணிக்கு ஆரம்பமாகும். இக் ஹொக்கிப் போட்டி 9 ஆம் திகதி வரை தொடர்ந்து மூன்று நாட்களும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (அ-5)

# வவுனியா பெரிய பள்ளிவாசல் நிர்வாகத் தெரிவில் குழப்பம்

(குருமன்காடு)

வவுனியா பெரிய பள்ளிவாசலில் இரு சாராருக்கிடையில் இடம்பெற்ற முறுகல் நிலையினால் குழப்பமான சூழல் வவுனியா நகர்ப் பகுதியில் நிலவியது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா பெரிய பள்ளிவாசலில் நேற்று முன்தினம் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற இருந்த நிலையில் முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினை சேர்ந்தோர் இதில் பங்குபற்றியிருந்தபோது புதிய நிர்வாகிகளை தெரிவது தொடர்பிலான வாக்கெடுப்பு முறையில் ஏற்பட்ட குழப்பமான சூழலே இம் முரண்பாட்டுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ள நிலையில் ஒரு அங்கத்தவர் ஒரு வாக்கே அளிக்க முடியும் என்ற நிலை காணப்பட்ட நிலையில் கடந்த 28 ஆம் திகதி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் ஒருவர் 15 வாக்குகள் அளிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இன்றைய தினம் ஒருவர் வவுனியா நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.வி.அருணகிரிநாதன் மூலமாக புதிய நிர்வாகத் தெரிவை நிறுத்த அனுமதி கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஆராய்ந்த வவுனியா நீதவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா எதிர் வரும் 14 ஆம் திகதிவரை கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன் பின்னரே வவுனியா பள்ளிவாசலில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினை சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டதாகவும் இது தொடர்பில் அவர்கள் வவுனியா பொலிஸில் முறைப்பாட்டினையும் செய்துள்ளனர்.

இந்நிலையில் வவுனியா பெரிய பள்ளிவாசலின் முன்னாள் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, பள்ளிவாசலின் தற்போதைய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கதைத்தபோது பள்ளிவாசலில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் பள்ளியுடன் தொடர்பில்லாத வேறு பிரதேசத்தவர்களே முரண்பட்டுக் கொண்டனர் எனவும் தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பில் முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணியாளருடன் தொடர்பு கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. (அ-250)

# கற்கோவளம் பனி தொழிற்சாலை நேற்றுமுன்தினம் திறந்துவைப்பு

### யு.எஸ்.எயிட் நிறுவன பிரதி பணிப்பாளர் பங்கேற்பு

(தும்பளை)



வேலைவாய்ப்பை வழங்கவும் கிராமங்களின் பொருளாதார அபிவிருத்தியை தூண் டுவதற்காகவும் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் கீழ் 80 பேர் வரை நேரடியாக கற்கோவளத்தில் அமைக்கப்பட்ட பனிக்கட்டி தொழிற்சாலைமூலம் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் என U.S.AID நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி டெனிஸ் றோலின்ஸ் தெரிவித்துள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை கற்கோவளம் பனிக்கட்டி தொழிற்சாலையை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், ஒரு வருடத்திற்கு முன்னர் இப்பனிக்கட்டி தொழிற்சாலையை வந்து பார்வையிட்ட போதுவெறும் வெளியாகவும் வனாந்தரமாகவும் காணப்பட்டது. இக்காணியை கற்கோவளம் பனிக்கட்டி தொழிற்சாலை அதிபர் திருநாவுக்கரசு சேந்தன், அவரது பாரியார் ஆகியோர் எனக்குக் காட்டினார்.

காட்டி இதுதான் பனிக்கட்டி தொழிற்சாலை அமையவுள்ள இடம்என அவர்கள் கூறிய போது அவர்களின் கண்களில் பனிக்கட்டி தொழிற்சாலையின் அமைவிடம் தென்படுவதைக் கண்டேன்.

முன்னர் 6 ஊழியர்களுடன் காணப்பட்ட இத் தொழிற்சாலை தற்போது 80 ஊழியர்கள் வரை வேலை செய்யக்கூடிய இடமாக மாறியுள்ளது.

வேலை வாய்ப்பையும் பொருளாதார அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்ட எமது நிறுவனத்திற்கு அமெரிக்க மக்களின் பணம் பயன்படுத்தப்பட்டது பெரிய விடயம் அல்ல.

இத்தொழிற்சாலை அதிபரினதும் அவரது பாரியாரதும் உழைப்பே பிரதான காரணமாகும் என அவர் தெரிவித்தார். அத்துடன் இத்தொழிற்சாலை வளர்ச்சி பெற வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து வேளாளர்
நட்சத்திரம்: மகம்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L,
தனியார் நிறுவன முகாமையாளர்
தொ.இ: B -1318

பிறப்பு: 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: சித்திரை 2
உயரம்: 5'6"
கி.பா: 39,4இல் சூரி,செவ் (ஒரே இடத்தில்)
தகைமை/தொழில்: A/L,
அரச ஊழியர் தொ.இ: B -1329

பிறப்பு: 1983 இந்து விஸ்வகுலம்
நட்சத்திரம்: பூரட்டாதி 1
உயரம்: 5'5"
தகைமை/ தொழில்: O/L, பிரான்ஸ்
(NOT- PR) தொ.இ: B -1331

பிறப்பு: 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தராடம் 2
உயரம்: 5'10"
கி.பா: 21, 12 இல் செவ்
தகைமை/தொழில்: Programme, Officer
தொ.இ: B -1333

பிறப்பு: 1967 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பரணி 1
உயரம்: 5'2"
கி.பா: 55, 8 இல் செவ்
தகைமை/ தொழில்: A/L
தொ.இ: G -1342

பிறப்பு: 1969 இந்து வேளாளர்
நட்சத்திரம்: அனுசம் 4
உயரம்: 5'2"
கி.பா: 16.5
தகைமை/ தொழில்: B.Com, ஆசிரியை
தொ.இ: G-1343

பிறப்பு: 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவோணம் 1,
8இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/ தொழில்: A/L
தொ.இ: G -1344

பிறப்பு: 1993 RC
உயரம்:5'
தகைமை/ தொழில்: A/L
தொ.இ: G -1346

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


# பணம் பெற்றுக் கொண்ட போதும் பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்கள் கட்டட இழப்பீட்டுத்தொகைக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்பத்தை பெற்றுக் கொள் வதற்கு கட்டடதிணைக்களத்திற்கு சென்ற போது 500 ரூபா பணத்தை பெற்றதுடன் அதற்கான பற்றுச்சீட்டை வழங்கவில்லை என அரச ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரச ஊழியர்கள் கட்டட இழப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அதற்கான விண்ணப்பத்திகதி கடந்த 28 ஆம் திகதி எனவும் பத்திரிகைகளில் பிரசுரமான செய்திகளை பார்வையிட்ட பின்னர் அரச ஊழியர்கள் விண்ணப்பப் படிவத்தை பெறுவதற்காக சென்ற வேளையே 500 ரூபா பணத்தை பெற்று விட்டு பற்றுச் சீட்டை வழங்காது விட்டுள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக்கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-259)


STUDY MBBS IN CHINA
உங்கள் வைத்தியராகும் கனவை நிறைவேற்றிக்கொள்ளுங்கள்



✔ SLMC இனால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம்
✔ இலகு தவணைக் கட்டணமுறை
✔ நவீன கற்கை முறைகள்
GJM Education Consular Services
தொடர்புகட்கு:
Lavanya Student Counselor
0777871649
(சி2571)

வேலை வாய்ப்பு (Management Trainess - 2013)
சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கு அதன் வடமாகாண கிளைகளுக்கு (யாழ்ப்பாணம். கிளிநொச்சி. முல்லைத்தீவு முகாமைத்துவப் பயிற்சிக்கு கணிதம். ஆங்கிலம் உட்பட O/L. A/L சித்தியடைந்தவர்கள் தொடர்புகொள்ளலாம். (ஆண்கள் மட்டும்)
✔ பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்
✔ பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படும்
✔ பயிற்சியின் பின்னர் மாதாந்தம் 50.000/- பெறலாம்
✔ பயிற்சிக்காலம் 3-6 மாதங்கள் (பயிற்சி இலவசமாக வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு: 0778920777, 0770308484, 0217201521

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள்
LL.B (UK) கற்கை நெறி
யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)
Batch 4 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன



* உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி.
* இலங்கை மற்றும் Uk பாட விதானங்களை உள்ளடக்கியது.
* யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
* இலகு தவணை கொடுப்பனவு முறை.
* இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்
PRINCE CITY CAMPUS
இல. 275. மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road). யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 077 077 2272
(சி2571)

அறிவித்தல்
யாழ். சிகிச்சை நிலையம்
எமது சேவையின் அடுத்த கட்டமாக வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவை எதிர்வரும் 04.03.13 திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப் படவுள்ளது. தொடர்ந்து தேவைக்கேற்ப சத்திர சிகிச்சை மற்றும் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகள் செய்து வழங்கப்படும். விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி ஊடாக அல்லது நேரில் வந்து தெரிந்து பதிவுகளை மேற்கொள்ளலாம்.
Dr.சு.தெய்வேந்திரன்
வைத்திய பணிப்பாளர்,
பலாலி வீதி. பரமேஸ்வரா சந்தி
தொ.பே: 021 221 9332, 021 222 3533
(2021)

வீடு வாடகைக்கு உண்டு
3 அறை, 2 ஹோல், அற்றாச் பாத் ரூம், தனிப்பட்ட வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு:
0775473126
0212225076
(சி-2551)

வெளிநாடு ஒன்றில் தொழில் வாய்ப்பா / பட்டப்படிப்பா/உயர்கல்வியா/சுயதொழிலா OR மேலைத்தேய நாடு ஒன்றுக்கு செல்ல வேண்டுமா?
இலவச ஆலோசனைக்கும், பயணத்துக்கும், தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ளவும்.
இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
Lanka Voice
0750650084
(C-2559)

புதிய முகவரியில் EXPOAIR your friend in the skies...
மேலான சேவையினை வழங்க,
நாங்கள் இடம் மாறுகின்றோம்,
உங்களுக்கு வசதியான சூழலுக்கு...



CHANGE OF OFFICE LOCATION
To serve you better... We are moving to a more convenient location...
Expo Aviation (Pvt) Ltd,
40, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel : 0212223891 / 0212226297/ 0212223790.
Email: jaffna@expoavi.com - Website: www.expoavi.com
(சி/2567)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சிவராத்திரி விண்ணப்பம்

அருள்பாலிக்கும் தெய்வங்களுக்கு
புரியவில்லை உம்
திருவிளையாடல்கள்
வரம் தர மறுக்கும் நீர்
தண்டனை தருவது நியாயமா?
எம்மிலும் பிழைகளுண்டு
வரம் தரம் தெய்வம் பின்
தோத்திரங்கள் பாடுவது
புரியும் உமக்கு எம்மவர்- நிலை
உமை ஆராதிக்க
வெளிநாட்டு உறவுகளிடம்
சில்லறைகள் சேமிக்கின்றோம்
என்னபாவம் செய்தோம்
மொழிப்பிரச்சினையா
ஊமையாகின்றோம்
மதப்பிரச்சினையா
நாத்திகராகின்றோம்
வேறு என்ன நாம் கேட்பதெல்லாம்
இனியாவது எம் நாடகங்கள்
தொடரும் என்றில்லாதவாறு
முடியட்டும்
அப்போது உம்மை வணங்குகின்றோம்
அது மட்டும் நீயும் மானிடனே

இணுவில்
வாகீசன்

## நீ வருவாய் என

சூரியனோடு உறவாடினேன்
நட்சத்திரங்களோடு
சண்டைபோட்டேன்
நிலவோடு போராடினேன்-நீ
என்னருகில் வருவாய் என...
மழைத்துளிகளைச் சேமித்தேன்
பனித்துளிகளை
கட்டியணைத்தேன்
கண்ணீர்த்துளிகளை
ரசித்தேன்
காவியமாய் வரைந்தேன்
உன்னை
நீ வருவாய் என...
என் காதலும்
நானும் உன்
நினைவுகள் நிஜமாகும்
என்றெண்ணி
காத்திருக்கிறோம்
இன்று சேற்றல்ல
உன்னைக் கண்ட
நாள் முதல்

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய் வடக்கு

## வன்னிப் பிடியில் இருந்து

அற்றைத் திங்கள் ஒன்றில்- நாம்
அடிவயிறு பற்ற...!
அழுது புலம்பினோம் அமைதிக்காய்...!
இற்றைத் திங்கள்களில்- நாம்
இறந்ததையும் இழந்தவைகளையும்
நினைந்து அழுகின்றோம்
ஆயுதம் தாங்கிய கரங்கள்
அமைதிக் கொடி தாங்கியும்....!
அங்கங்கே ஆழிவாய்கள்
அமுக்குவதற்காய்...!
காய்ந்த தருக்கள்
செய்மையில் சோர்ந்து நிற்கும் நீதிக்காய்...!
எரிந்த உயிர்களோ
பிரிந்த உறவுகளுக்காய்...
மரித்த எதிர்பார்ப்புக்களுடன்
விரிந்து கிடக்கும் வன்னி எங்கும்
கண்ணீர்க்கோலம்...!

முல்லைக்கமால்
முல்லைத்தீவு

## இமயம் தொட...

உன்னால் இப்பூமிக்கு
என்ன நன்மை என்பதை
எண்ணத்தில் எடுத்துக்கொள்
ஆபத்து வரும்போது
தலையை உள்ளிழுக்கும்
ஆமைகளாய் இருந்திடாமல்
நேர்மைத் திடத்துடன்
நெஞ்சை நிமிர்த்திடு
உன்னால் இப்பூமி
பலனடையும்

மாவை. நா. கஜேந்திரன்

## புதிய உலகம்

நான்கு சுவர்கள்
கரிய இருள்
தனிமையின் துணை
மௌனத்தின் இராச்சியம்
கண்ணீரை ஒற்றிவிட
தாயாத் தலையணை
உலகமதில்
ஊமையாய் வேறென்ன கேட்டேன்
எண்ணில்லா ஆசையாய்
ஏதும் விரும்பாதபோதும்
ஏழையாய் இடம் என்
ஏழ்மை விண்ணப்பமும்
நிராகரிப்பா?

க.அனுசா
வற்றாப்பளை

# மௌனத்தின் தேடல் - 145



## நம்பிக்கை

மனதில் உறுதி உள்ளதால்
கால் ஊனம்
அவனை கோழையாக்கி
விடவில்லை
கைகளை காலாக்கி
முன்னேறும் இவன்
வாழ்க்கைப் பயணத்தை
ஆரம்பித்துவிட்டான்

ம.வினோத்
தெல்லியடி

## ஆடவனின் பதில் யாதோ?

கீ போட் தொடவேண்டிய
உன் கரங்கள்
கற்களைத் தொடக்காரணம்
வெறிகொண்ட யுத்தமா? இல்லை...
கல்நெஞ்சம் கொண்ட கடவுளின்
போலி வஞ்சக விளையாட்டா?
பதில்கூறு இளைஞனே!- உன்
பாதங்கள் விரைவில் தரையை தொடும்...

பொ.சாம்பவி
பருத்தித்துறை

## நல்வாழ்வு

வளைவில்லை நதியில்லை
வலியில்லை வாழ்வுமில்லையாம்
இதையுணர்ந்தால் இயலாத தன்மை
இல்லாமற் போகும்
நல்வாழ்வு என்றும்
நிழல்போற் தொடரும்

க.நாகராசா
நுணாவில்

## நாளை உனதே

ஊனம் என்று
உறங்கிவிடாமல்
ஊழ்கனத்த உலகில்
வாழ்வதற்காய்- மன
உறுதியுடன் போராடு
வெற்றி உனதாகும்
நாளை

ஜெ.கீர்த்தனன்
யாழ்.பல்கலைக்கழகம்

## எதிர் நீச்சல்

இந்த சமுதாயம்
மனிதாபிமானம் அற்றது
அதனால்தான் நீ
இவ்வாறான சூழ்நிலையை
அனுபவிக்கின்றாய்
நீ முயற்சி செய்
சிகரத்தை அடைவாய்

சொ.அருள்ஜோதி
யாழ்ப்பாணம்

## மரணம் வேண்டாம்

வண்டி வாழ்க்கை
கசந்து போனது
தாண்டித்தூரம்
முடிவுற வந்தது
மாண்டுபோக மனதும் வந்தது
வேண்டாம் என்றொரு
நினைவும் வந்தது

பால.நிமல்சன்
முரசுமோட்டை

## முயன்றிடு

இளைஞனே...
நீபோகும் பாதையில்
கற்கள் முட்கள்
தடைகளாக
இருந்திடலாம்
கலங்கிடாதே
உன் ஊனம்
உனக்கு படிக்கல்லாக
அமைந்திடுமே!

மனோராசன்
கிளிநொச்சி

## எது ஊனம்

ஊனமான கால்களோடு
கைகளை கால்களாக்கி
வெள்ளமதைக் கடக்க
நினைக்கும் நீ- உண்மையில்
ஊனம் என்பது
எதுவென்று உனது
செயலில் நிரூபித்து
காட்டுகின்றாய்

ம. தருண்
[illegible]

## திருப்தி

குதி உயர்ந்து விலைகூடிய
செருப்பு வேண்டும்
என்று அடம்பிடித்தேன்
கால் ஊனமுற்ற
இவனைக் காணும் வரை

சி.லாலி
வதிரி

## சரித்திரம் படைப்பாய்

வேதனைகளையும்
சோதனைகளையும்
தகர்த்தெறிந்து
சாதனைகள் படைக்கவென
சவாலுடன் செல்லும் உனக்கும்
சரித்திரத்தில் இடமிருக்கு

பி.ஞானகலை
பருத்தித்துறை

## வலிமை

விதி மீது பழிபோட்டு
விழி நீர் சிந்தி
வீதி வழி வீழ்ந்து கிடக்கும்
எண்ணம் விட்டு
வீரம் என்ற உணர்வு
கொண்ட உன் கைகள்
கொண்டு விதிவழி
நடக்கிறாயே!!!

ஜெ.கிஷோக்குமார்
அல்வாய்

## உள்ளத்தில் நம்பிக்கை

உடல் ஊனமானாலும்
உள்ளம் ஊனமடையாமல்
உள்ளத்தில் நம்பிக்கை வைத்தால்
இந்த மனிதன் போன்று
நாமும் வெற்றி பெறலாம்

மேரி அல்போன்சா
குருநகர்

## மண்ணில் கால் பதிப்பாய்

காலூனமுற்ற நிலையிலும்
கோலூன்றாது துணிவோடு
கல்மேல் கையூன்றிக் கரைசேர
வல்லமையோடு எத்தனிக்கும்
வீரனே துணிந்து செயற்படு
ஒருநாள் எழுந்து நடப்பாய்
இம்மண்ணில் கால்பதித்து

துரை,தென்மட்டுவில்

## வீராதி வீரா

மழைவெள்ளம் கரை புரண்டோட
மக்கள் எல்லாம் உயிர் தப்ப ஓட
உன்கால்கள் மட்டும் ஓட மறுக்க
துணையற்ற மனிதனாய்
தனித்து நீ போனாலும்
உன் கையை கால்களாக்கி
நம்பிக்கை மனதில் வைத்து
வீரமாய் கடக்கின்ற நீ
வீராதி வீரன் ஐயா

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -146



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 08.03.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக பண்பாளருக்கு தலைநகரில் பட்டம் கிடைத்தது

வலம்புரி Graphics (2062)

கொட்டடி பிரதேசத்தில் பிறந்து பல வகையான பொது அமைப்புக்களிலும் இணைந்து சோதனைகள் பல கண்டு அவற்றையெல்லாம் சாதனைகளாக மாற்றி பொதுச் சேவையே தனது இலட்சியம் எனச் செயற்பட்டு அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், வில்லூன்றி இந்து மயான சபை, யாழ்.பிரதேச செயலக கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களில் தலைமை தாங்கி யாழ்.மாவட்டத்திலே சிறந்த சமாசம் என ஜனாதிபதியால் சிபாரிசு செய்யப்பட்டு மற்றும் சமாதான நீதவானாகி கலாச்சார பேரவையின் உறுப்பினராய் சிறுவர், முதியோர் சங்க பிரதிநிதியாய் இவ்வாறான பல வகையான அமைப்புக்களிலும் தன்னை இணைத்து கிராமத்துக்கும் மக்களுக்கும் பெருமை தேடியவரும் யாழ்ப்பாண பொலிஸ் பிரிவின் J/83 பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுவின் உபதலைவராய் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் யாழ்.குடாநாட்டில் வாழும் பல சமூகப் பெரியவருக்கு 'சமூக திலகம்' எனும் விருதினை வழங்கி கௌரவித்து பாடசாலை மாணவர்கள், விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்களை வழங்கி சிறப்பான சேவை செய்த


## கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன்

அவர்கட்கு தலைநகர் கொழும்பில் அகிலஇன நல்லுறவு ஒன்றியத்தால்

## 'சாமஸ்ரீ தேசகீர்த்தி'

எனும் விருது கிடைத்தமையையிட்டு பெரிதும் மனம் மகிழ்ச்சியடைகின்றோம்.

கி.மகாலிங்கம், சமாதான நீதவான,
J/83 இளைப்பாறிய கிராம அலுவலர்.



# பீமரதப் பெருஞ்சாந்தி விழா நல்வாழ்த்து

வலம்புரி Graphics (2051)

நீர்வேலிக் கிராமத்தின் சமய சமூக எழுச்சிக்கு வழிகாட்டியாக விளங்குபவரும்
நீர்வைச் செல்லக் கதிர்காம சுவாமி தேவஸ்தானப்
பிரதம குருவுமாகிய

## பிரம்மஸ்ரீ. கு.தியாகராஜக் குருக்கள்

(நீர்வை மணி ஐயா)


அவர்கள் அகவை எழுபது எய்தி இன்று (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமதி. கெஜாவல்லி அம்மா சமேதராகப் பீமரதப் பெருஞ்சாந்தி விழாக் காண்கிறார்.

பூசனை முருகனார்க்குப் புரிவதில் தேர்ந்த வள்ளல்
பாசமாய் யார்க்கும் அன்பு பகர்ந்திடும் பண்புமிக்கோன்
காசினி தன்னில் நீர்வைக்(கு) அணியதைச் சேர்க்குந்தீரன்
நேசராம் மணியை யாவை நித்தமும் பணிவோம் நாமே

குருக்கள் ஐயா குடும்பத்தினருக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் எம்மெல்லோருக்கும் அன்னவர்தம் குரு ஆசி கைகூடவும் பிரார்த்திக்கின்றோம்

பவானி களஞ்சியம்,
இராச வீதி, நீர்வேலி.
பொன்செல்வ மஹால் குடும்பத்தினர்

(2051)



# சேவைநலன் வாழ்த்து

மக்கள் வங்கி யாழ்.பிராந்திய முகாமையாளர்

## உயர்திரு. சிவகுரு புத்மநாதன்

**கல்வி கற்ற பாடசாலை :**
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**வங்கி சேவைக்காலம்:**
01.03.1975 28.02.2013

**பிராந்திய முகாமையாளராக :**
01.01.2009 - 28.02.2013

முப்பத்தெட்டு வருடங்கள் மக்களுக்கும் மக்கள் வங்கிக்கும் முழுமையாய் தன்னை அர்ப்பணித்து மகத்தான சேவை புரிந்து 28.02.2013 அன்று ஓய்வுபெற்ற எமது பிராந்திய முகாமையாளர் **உயர்திரு.சிவகுரு பத்மநாதன்** அவர்களுக்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

மனம் சுத்தம் கைசுத்தம் பேசும்போது
மொழி சுத்தம் என நின்ற ஐயா இற்றைத்
தினம் மட்டும் உங்களன்பு வழிகாட்டோடு
செய்பவைகள் சிறப்பமையச் செய்ய கற்றோம்
வன்முறைப்போர் சூழ்ந்திருந்த போதுமிங்கு
வாடிக்கையாளர் குறையகற்றி கடமை செய்தீர்
மனம் தேக்கும் துன்பமுகங்கள் பிரிவென்றாலும்
மயிலழகன் இறையருளைப் பெறுக வாழ்க


**வாழ்த்துவோர்:**
**மக்கள் வங்கி குடும்பம், யாழ்.பிராந்தியம்**

வலம்புரி Graphics (C.2562)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிசயக் கனவு




லட்சுமிபுரத்தில் சிவராமன் என்ற பணக்கார இளைஞன் வாழ்ந்து வந்தான். சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்த .அவனை அவனுடைய அத்தை கண்ணும் கருத்துமாய் வளர்த்துவந்தாள். சிறு வயதிலிருந்தே ஒருமுழுச் சோம்பேறி ஆகியிருந்த சிவராமன் உடல் வணங்கி எந்த வேலையும் செய்வதில்லை.

ஒரு அமாவாசை இரவில் அவன் ஒரு அதிசயமான கனவு கண்டான். அந்தக் கிராமத்து துர்க்கையம்மன் கோயிலுக்குள் ஒரு தங்க சிம்மாசனத்தில் தான் வீற்றிருப்பது போலவும் தன் தலையில் ஓர் ஆந்தை அமர்ந்திருப்பது போலவும் அவன் கனவு கண்டான். மேலும் அந்தக் கனவில் ஊரார்கள் துர்க்கையம்

## அம்புலிமாமா கதைகள்

மனுக்குப் பூசை செய்யாமல் அவனுக்குப் பூசை செய்வது போலவும் தூரத்தில் அவனை நோக்கி ஒருநாய் குரைத்துக் கொண் டிருப்பது போலவும் கண்டான். சிவராமன் விழித்துக்கொண்டதும் தான் கண்ட அதிசயக் கனவை தன் அத்தையிடம் கூறிவிட்டு விளக்கம் கேட்டான். அத்தை சிரித்துக் கொண்டே சிவராமா கனவுகள் தேவ இரகசியம் என்பார்கள். அதன் பொருளை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. நீ வேண்டுமானால் புத்திசாலியான நமது பஞ்சாயத்துத் தலைவர் நாராயணனைக்கேள் என்றான்.

அவரிடம் சென்று தன் கனவைப் பற்றிக் கூறி விளக்கம் கேட்டவுடன் அவர் உன்னை நீ மிகப்பெரிய மனிதனாக எண்ணிக் கர்வம் கொண்டுள்ளாய். அதனால்தான் இப்படிப்பட்ட கனவு கண்டாய் என்று கூற அந்தப் பதிலினால் சிவராமன் திருப்தி அடையவில்லை. பெரியவரே நான் என்னைப் பெரிய மனிதன் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. நீங்கள் சொல்வது உண்மையாகவே இருந்தாலும் ஆந்தை



என் தலையில் அமர்ந்திருந்தது பற்றியும் நாய் குரைத்ததைப் பற்றியும் உங்கள் விளக்கம் என்ன? என்று கேட்டான் சிவராமன். அதற்கு விளக்கம் கூற முடியாத நாராயணன் நமது பக்கத்துக் கிராமத்திலுள்ள ஸ்ரீதர பண்டிதரைப் போய்க் கேள் என்றார். பின்பு சிவராமன் அந்தப் பண்டிதரிடம் சென்று தன் கனவுக்கு விள க்கம் கேட்டான். இரண்டு, மூன்று முறை சிவராமனது முகத்தை உற்றுப் பார்த்த பின்பு பண்டிதர் உன்னுடைய கிராமத்தில் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது. அதனால்தான் மக்கள் அம்மனை விட்டுவிட்டு உன்னைப் பூசை செய்கிற மாதிரி கனவு கண்டாய். தவிர பசியெடுத்ததால் நாய் குரைத்தது. தேவியை மறந்து உன்னை மக்கள் பூசை செய்ததால் ஆந்தை உன் தலையில் உட்கார்ந்தது என்றார்.

இந்த விளக்கத்தாலும் திருப்தியடையாத சிவராமன் பதில் ஏதும் பேசாமல் சலிப்புடன் தன் கிராமத்தை நோக்கித் திரும்பினான். வரும் வழியில் அவன் கிராமத்துக்கு அருகில் ஒரு மரத்தடியில் தாடி மீசையுடன் அமர்ந்திருந்த ஒரு சாமியாரைப் பார்த்தான். அவரைக் கிறுக்குச் சாமியார் என்று கிராமத்தினர் கேலி செய் வதுண்டு. அவர் சிவராமனை நோக்கி என்னப்பா சிறிது நாட்களாக உன்னை இந்தப் பக்கமே காணவில்லையே என்றார். சிவராமன் அவரிடம் நான் கண்ட ஒரு அதிசயக் கனவைப் பற்றிய விளக்கம் கேட்க பலரிடம் சென்று வருகிறேன் என்றான். யாராலும் சரியாக விளக்கம் கூறியிருக்க முடியாதே என்றார்.

நீங்கள் சொல்வது சரி என்ற சிவராமன் உங்களுக்கு எப்படி அதைப்பற்றித் தெரியும் என்று கேட்டான்.

முட்டாளே கனவுகளுக்கு



விளக்கம் தரக்கூடிய ஒரே ஒருவன் நான்தான் என்றார். அப்படியானால் நீங்களே சொல்லுங்கள் என்ற சிவ ராமன் தன் கனவைப்பற்றி அவரிடம் விவரித்தான். அதைக்கேட்ட சாமியார் பலமாகச் சிரித்தார்.

கேள் மகனே! என்று தொடங்கியவர் மக்களிடம் தெய்வ பக்தி நாளுக்கு நாள் குறைந்து சுயநலம், பேராசையும் அதிகரித்துள்ளது. உன்னைப் போன்ற ஒரு சோம்பேறியை அவர்கள் வழிபடுமாறு கனவு தோன்றியது இதையே காட்டுகிறது.

தங்க சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தது உன்னுடைய பேராசையையும் கர்வத்தையும் காட்டுகிறது.

அப்படியா நாய் குரைத்ததும் ஆந்தை அமர்ந்ததும் ஏன்? என்று சிவராமன் கேட்க உனக்கு வயிறார தினம் சோறு போடும் உன் அத்தை ஒரு நாய்க்கு மீதி சோறைப் போடுகிறாள்.

நீ வேலையற்று சோம்பேறியாகத் திரிந்து வயிறு புடைக்க உண்ணுவதைக் கண்டே அந்த நாய் உன்னைப் பார்த்துக் குரைத்தது. ஆந்தை இருட்டில் வசிக்கும் பறவை. அறியாமை என்ற இருளில் மூழ்கியிருக்கும் உன்னையே தன் இருப்பிடமாக ஆந்தை தேர்ந்தெடுத்தது என்றார்.

ஆகா ஊரார் உங்களைக் கிறுக்கு பிடித்தவர் என்கின்றனர். ஆனால் உண்மையிலேயே நீங்கள்தான் அறிவாளி.

என் கண்களை இன்று திறந்து விட்டீர்கள் என்றான் சிவராமன் நன்றியுடன். ஊரே என்னை கிறுக்கு என்று தூற்றும் போது நீ மட்டும் என்னை அறிவாளி என்று எப்படிச் சொல்லலாம்? நான் இனி இந்தக் கிராமத்தில் இருக்கப் போவதில்லை என்று அந்தக் கிராமத்தை விட்டுச் செல்லலானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 02

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



“கேளாத தகவல் இது. எங்களுக்கு மேற்குத் தொடர்ச்சி மலையின் என்றீர்களே... எப்படி?”

“மனிதர்கள் மட்டும்தான் தேசம் என்ற பழைய கருத்துக்கு நாம் பழகி விட்டோம். ஆனால், மனித ராசிக்கு முன் பிறந்த உயிர்க்கோவைகளை மறந்துவிட்டோம். இந்த மேற்குத் தொடர்சிசி மலையில் 5000 வகைத் தாவரங்கள், 520 வகைப் பறவைகள், 130 வகைப் பாலூட்டிகள், 65 வகைப் பாம்புகள், 160 வகை ஈருயிர்கள் உயிர்த் தொடர்ச்சியாய் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அது தேசம் அல்லாமல் வேறென்ன? இந்த உயிரிகள் இல்லாமல் ஜீவ கூட்டத்துக்குப் பெருமை என்ன? இத்தனை வகை உயிர்களிருந்தும் அர்த்தத்தில்?”- என்றாள் எமிலி.

“அண்மையில் வந்தது பெண்ணே உங்கள் அலோபதி, அதற்குமுன் எங்கள் ஆதிகுடிகளுக்கு உணவும் தாவரம்தான்; மருந்தும் தாவரம் தான். தொப்புழ்க்கொடி அறுத்த எங்கள் சிசுக்களுக்குக் கிருமி நாசினியாய் நாங்கள் பூசித் தேய்ப்பது வேப்பமர வித்தான தாவர எண்ணெய்தான். இறப்புக்குப் பின் துர்நாற்றம் இல்லாமல் நாங்கள் பிணம் பேணுவது கருஞ்சந்தனம் என்ற தாவரத்தைலம் தெளித்துத் தான். இப்படிப் பிறப்பு முதல் இறப்புவரை எங்கள் வாழ்க்கை தாவரங்களின் தாழ்வாரங்களிலேயே

இலங்கைத் தமிழருக மாதிரி எங்க வீட்டையும் கூட்டையும் பிடுங்கி விட்டுட்டீகளேன்னு தலைக்கு மேல் கதறிக் கொண்டே புதுக் கூடு தேடிப் பறந்து கொண்டிருந்தன அந்தக் குளத்தில் பழகிப்போன பழைய பறவைகள்.

இஷிதான் உடைத்தான் இறுக்கமான மௌனத்தை.

“நம் இதயங்கள் ஒரே புள்ளியில் சிந்திக்கின்றன. உங்கள் கருத்துக்களைப் புரிந்து கொள்கிறோம். ஆனால், ஒன்று; எல்லோரையும் போல நீங்களும் பிரச்சினைகளைத் தான் பேசுகிறீர்கள். தீர்வு என்ன?”

“மனிதா...! இயற்கையைக் கொல்லாதே என்கிறேன். சக மனிதனைக் கொல்வதற்கு எப்படி உரிமை இல்லையே இயற்கையைக் கொல்வதற்கு மனிதா... உனக்கு உரிமை இல்லை என்கிறேன்”

“நீங்கள் மரங்களையும் மக்களையும் கொல்லாதே என்கிறீர்கள். மண்ணைக் கொல்லாதே என்கிறோம் நாங்கள்”

“விரித்துச் சொன்னால் விளங்கும் எனக்கு”

“இந்தியா கண்டடைந்த பெரிய தொழில்நுட்பம் இயற்கை விவசாயம். அதைத் தொலைத்துவிட்டது இந்தியா. இந்திய மண் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது”

“சான்றோடு சொல்லுங்கள்”

“மண் ஈன்று கொடுப்பதெல்லாம் உள்ளிருக்கும் உயிர்த் தன்மையால் தான். அந்த உயிர்த்தன்மைதான் கொல்லப்படுகிறது. ஜான்ஜீவன்ஸ் என்னும் பிரெஞ்சு விஞ்ஞானியை இந்தச் சத்தியத்தை நிறுவச் சாட்சிக்கு அழைக்கிறேன். அமெரிக்காவில் ராசாயனம் விவசாயம் ஆறு கிலோ மண்ணின் உயிர்தன்மையாயைக் கொன்று விட்டுத்தான் ஒரு கிலோ விளைவிக்கிறதாம். இந்தியாவில் பன்னிரண்டு கிலோ மண்ணின் உயிர்த்தன்மை கொல்லப்பட்ட பின்னர்தான் ஒரு கிலோ விளைகிறதாம். சீனாவில் பதினெட்டு கிலோ மண்ணின் உயிர்த்தன்மையைத் தின்று விட்டுத்தான் ஒரு கிலோ உணவு விளைகிறதாம். மலைக் கொலை தடுக்கப் பார்க்கும் கவிஞரே... மண்கொலை தடுக்க என்ன செய்யப் போகிறோம்?”

“இயற்கைக்குத் திரும்பு என்பது மனிதர்க்கு மட்டுமல்ல மண்ணுக்கும் பொருந்தும். செயற்கை உரங்களை ஒழித்துவிட்டு மீண்டும் இயற்கை உரத்துக்கே திரும்ப வேண்டும்”

எமிலி சிரித்தாள்.

பெருமை சொல்லுங்கள்”- ஆர்வத்தில் வார்த்தைகள் துடித்தன சின்னப் பாண்டிக்கு.

“இது வெறும் மலை அல்ல தம்பி! இந்தியாவின் மேற்கெல்லையில் அரபிக் கடலுக்கு இணையாய் ஆயிரத்து அறுநூறு கிலோமீட்டர் நீண்டிருக்கும் ஒருதேசம். நர்மதா தபதி நதிகளைக் குஜராத்துக்குள் இறக்கிவிட்டது இந்த மலைதான். கிருஷ்ணா, கோதாவரியை ஆந்திரப் பிரதேசத்துக்குள் அனுப்புவதும் இந்த மலைதான். தமிழ்நாட்டுக்குள் காவிரியாய்ப் பெருக்கெடுக்கும் கபினியைக் கர்நாடகத்துக்கு ஈன்று புறம் தருவதும் இந்த மலைதான். தமிழ்நாட்டுக்குள் அமராவதியாய் வழியும் நொய்யாற்றையும் வைகையில் கலக்கும் பெரியாற்றையும் கேரளத்தில் உற்பத்தி செய்வதும் இந்த மலைதான். தமிழ்நாட்டுக்குள் பிறந்து தமிழ்நாட்டுக்குள் மட்டுமே பரவிப் பாயும் தாமிரபரணியைத் தருவதும் இந்த மேற்கு மலைத் தொடர்தான். ஆனால், கங்கா யமுனா நதிகளைப் போல் இவை கவனிக்கப்படவில்லை. அசோகச் சக்கரவர்த்திக்குள்ளும் அக்பருக்குள்ளும் எங்கள் சேர- சோழ- பாண்டியர்கள் மறைக்கப் பட்டதுபோல் இமய மலையின் இடுக்குகளில் எங்கள் மேற்குத் தொடர்ச்சிமலை புதைக்கப்பட்டு விட்டது”

“உங்கள் சினம் அறிவுவசப்பட்டதா? உணர்ச்சிவசப்பட்டதா?” மயிலிறகு வார்த்தைகளால் வாள் வீசினாள் எமிலி.

“முதலில் காரணத்தைச் சொல்லி விடுகிறேன். பின்னர் என் சினம் எதன்வயப்பட்டது என்பதை நீங்களே வகைப்படுத்துங்கள். அரபிக் கடல் காற்றைத் தடுத்து மேகத்தின் மடியில் செலுத்தி மழை கறப்பது இந்த மலைதான். மரங்களின் குறைந்தால் மலையின் உயரம் குறையும். மலையின் உயரம் குறைந்தால் மழையின் அளவும் குறையும். இந்த மலை நதிகளையே நம்பியிருக்கும் எங்கள் தாகப்பட்ட சமூகம் என்னவாகும்? அதனால் தான் மேற்குத் தொடர்ச்சி மலை காக்கப்பட வேண்டும் என்கிறேன்”

“இது மலை அல்ல; தேசம் மலையில் நான் மதிப்பது புல்லைத் தான்”

“புல்லையா?”- எள்ளல் தோய்ந்த ஆச்சரியம் தொனித்தது சின்னப் பாண்டி குரலில்.

“வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்



என்ற பழமொழி அறிவாய் அல்லவா சின்னப்பாண்டி? மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் புல்தான் ஆயுதம். 1200 புல்வகைகள் மண்டிக் கிடக்கின்றன மலைத்தரையில். அவைதாம் மழை நீரை மடியில் வாங்கி வைக்கும் வங்கிகள். விழுந்த மழையை ஆவியாகவிடாத காப்புக் கவசங்கள். அந்தப் புல்லின் அடி மண்ணில் சேமித்து வைக்கும் அமிர்த மழையைத்தான் சுனையாய்- ஓடையாய்- அருவியாய்- நதியாய் வடிகட்டி வடிய விடுகிறாள் மலை மாதா. மாதாவும் அவளே; மருத்துவச்சியும் அவளே”

“மருத்துவச்சி என்றால் எத்த

நடந்தது. இன்னும் கருநெல்லி, கல்லுருக்கி, ஒந்தாழை, சரக் கொன்றை, நத்தைசூரி, ரத்த வேங்கை, ஆங்காரவல்லி, நீர்ப் பூண்டு, காட்டுச் சீரகம், கடுக்காய், நறுந்தாழி, நரிவிழி, மலைவேம்பு, கருந்துளசி, கரும்பூதாளம், கஸ் தூரி, கல்தாமரை, மலைச் சடையான், மலையன்கிழங்கு- இப்படிப் பெயர் அறிந்த மூலிகை வகைகளையும் அனாதைக் குழந்தைகளைப் போல் பெயர் தெரியாத ஆயிரமாயிரம் மூலிகைகளையும் தன் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் மலைமாதா மருத்துவச்சி அல்லாமல் வேறென்ன?”

அங்கே ஒரு நீண்ட மௌனம் நிலவியது.

தூரத்துத் தென்னங்கீற்றுகளோடு காற்றின் கனத்த உரையாடல் மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தது.

## இயற்கையின் சிறுபிரதிதான் மனிதன்; மனிதனின் சிறுபிரதிதான் இயற்கை

“அது ஒரு நாளில் நிகழும் மாற்றம் அல்ல. அத்துணை இயற்கை உரத்துக்கு எங்கே போவது? ஜனத் தொகை குறைத்துக் கால்நடை பெருக்குவதற்குப் பதலாக ஜனத் தொகை பெருக்கிக் கால்நடை குறைத்துவிட்டது இந்தியா. விலங்குகள் இல்லாத தேசத்தில் மனிதர்கள் முழுமையுறுவதில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்றும் தொடர்ந்து இரு நாட்களும் மின்வெட்டு அமுலில் இருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரையும் மருதனார்மடம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப்பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ் மாநகர சபைப் பகுதி ஸ்ரான்லி வீதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, மருத்துவப்பீடப் பிரதேசம், முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம், அளவெட்டி, மல்லாகம்ஒருபகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை ஆகிய இடங்களிலும் சுன்னாகம், குப்பிளான், மல்லாகம், ஏழாலை, மயிலங் காடு, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி, மாவிட்டபுரம், கீரிமலை, தெல் லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவி ளான் ஆகிய இடங்களிலும் நாளை திங்கட்கி ழமை முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற் பகல் 5 மணிவரையும் மாலுசந்தி முதல் இரும்பு மதவடி, மடத்தடி வரையான பிரதேசங்களிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5மணிவரையும் அச்சுவேலிப் பிரதேசத்தின் இடைக்காடு, தம்பாலைப் பிரதேசங்கள், அண்ணாசிலையடிப் பிரதேசம், மாசார் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# ஜெனீவா தீர்மானத்திற்கு அதிகளவு ஆதரவு கிடைக்கும்

## லக்பிம நாளேடு தகவல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்திற்கு கூடுதல் ஆதரவு கிடைக்கும் சாத்தியம் காணப்படுவதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முயற்சி எடுத்து வருகின்றன.

இந்தத் தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மை உறுப்பு நாடுகள் ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. கடந்த தடவையும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்கவோ நடவடிக்கை எடுக்கவோ முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (அ-2)

# தேசிய அமைப்பாளர் பதவி பசிலுக்கு; சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவிற்கு வழங்கப்பட்டமைக்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தே தேசிய அமைப்பாளர் பதவியை வகித்து வந்தார்.

அவரது மறைவின் பின்னர் அந்தப் பதவி வெற்றிடமாக காணப்பட்ட அதேவேளை, பதில் தேசிய அமைப்பாளராக ஜனக பண்டார தென்னக்கோன் கடமையாற்றினார்.

இந்தப் பதவியை பெற்றுக்கொள்ளக் கூடிய சகல தகுதிகளும் தமக்குக் காணப்படுவதாக காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மேலும் சில சிரேஷ்ட உறுப்பினர்களும் இந்தப் பதவி தமக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் நிலவி வரும் கருத்து முரண்பாடுகள் குறித்து ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

க்ட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவிற்கும் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# இத்தாலிய புலனாய்வுப் பிரிவினர் இலங்கை தூதுவரிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் குறித்து இத்தாலிய புலனாய்வுப் பிரிவினர் இலங்கைத் தூதுவரிடம் வாக்கு மூலமொன்றை பதிவு செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் குறித்து குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்துக்கள் தொடர்பில் தகவல்களை சேகரித்துக் கொள்ளும் நோக்கில் இத்தாலிய புலனாய்வுப் பிரிவினர் இலங்கைத் தூதுவரை சந்தித்துள்ளனர்.

இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் அசித பெரேரா, சிரேஷ்ட இராஜதந்திரிகள், தூதரக அதிகாரிகள் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க எழுத்து மூலமான சான்றுகள் உண்டா என புலனாய்வுப் பிரிவினர், தூதுவர் அசித பெரேராவிடம் கோரியுள்ளனர்.

எவ்வாறெனினும் இறுதியில் எழுத்து மூலமான ஆவணங்கள் இன்றி முறைப்பாடு குறித்த உத்தியோகபூர்வ வாக்கு மூலத்தை பதிவு செய்ய முடியாது என புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்ததாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# பத்து வருடங்களுக்கு ஒருமுறை அ.அட்டைகளை புதுப்பித்தல்?

தேசிய அடையாள அட்டையை 10 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிப்பதற்கான நடைமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் ஆட்பதிவு திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருவதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தும் திட்டத்திற்கு ஒத்ததாக 10 வருடங்களுக்கு ஒருமுறை அடையாள அட்டையை புதுப்பிக்கும் நடவடிக்கை குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக தமது புதிய தகவல்களை 10 வருடங்களுக்கு ஒருமுறை அடையாள அட்டையில் உள்ளடக்குவதற்கான வாய்ப்பு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அமைப்பாளர் பதவி வெற்றிடம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் வெற்றிடத்தை நிரப்ப கட்சி தலைமையகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து அமைப்பாளர்களுக்கான விண்ணப்பங்களை கட்சி தலைமையகம் கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, யாழ்ப்பாணம்,காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, கோப்பாய், மானிப்பாய், நல்லூர், பருத்தித்துறை, உடுப்பிட்டி, வட்டுக்கோட்டை ஆகிய தொகுதிகளுக்கும் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளுக்கும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா தேர்தல் தொகுதி என்பவற்றுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அமைப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் செயலாளர் நாயகம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இல 307, ரீ.பி. ஜயா மாவத்தை, கொழும்பு -10 என்ற முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும் என கட்சி யின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத் திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.


விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் தேர்தல் தொகுதியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும் என அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# உயர் கல்வியமைச்சுக்கு மும்மொழி இணையத்தளம்

உயர் கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ மும்மொழி இணையத்தளத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆரம்பித்து வைத்துள்ளார்.

அத்துடன் உயர் கல்வியமைச்சின் தகவல்கள் எந்த நேரத்திலும் எவரும் பெற்றுக் கொள்ளக்கூடிய 1918 என்ற தொலைபேசி இலக்கம் கொண்ட தொலைபேசிச் சேவையையும் ஜனாதிபதி திறந்துவைத்தார். உயர் கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் 2013 தொடக்கம் 2015 இடைக்கால முதலீட்டுத் திட்டத்தை செயற்படுத்து தொடர்பில் உயர் கல்வி அமைச்சு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. (அ-2)





சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு மக்கள் பங்கேற்பு ரீதியாகத் தயாரித்த அனுபவப் பகிர்வு அமர்வு பிரதேச அபிவிருத்தித் திட்டம் சமர்ப்பித்தலும் அமுலாக்கம் பற்றிய கலந்துரையாடலும் அண்மையில் இல. 1229, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள செல்வமகால் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந் நிறுவனத்தலைவர் ச.செந்தூராசா தலைமை உரை நிகழ்த்துவதையும் அனுபவ பகிர்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைக்கேற்ப முடிவுகளை எடுப்பதில் சிறந்த நிர்வாகி எஸ்.பத்மநாதன்

"தலைமைத்துவமானது ஒருவர் கொண்டிருக்கும் வலுவினால் தீர்மானிக்கப்படும். உதவியாளர்களை விட தலைவர் கூடிய வலுவினைக் கொண்டிருந்தால் அவர் ஏனையோர் மீது செல்வாக்கினைச் செலுத்தி விட முடியும். இந்தச் செல்வாக்கு உதவியாளர்களது நடத்தைக்கோலங்களில் விரும்பிய பலமாற்றங்களைக் கொண்டு வர வகை செய்யும்"

இந்தக் கருத்து நடைமுறையில் யதார்த்தமாக நாம் கண்டு உய்த்துணரக் கூடியதாக எஸ்.பத்மநாதனின் முகாமைத்துவத்தின் கீழ் இருந்தமையை மக்கள் வங்கிச் சமூகம் இரண்டாவது பேச்சுக்கிடமின்றி ஏற்றுக் கொள்ளும் என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு விடயம்.

எஸ்.பத்மநாதன், யாழ். பிராந்தியத்தின் கிளை முகாமையாளராக, உதவிப் பிராந்திய முகாமையாளராக, திருகோணமலைப் பிரதேசத்தில் உதவிப் பிராந்திய முகாமையாளராக, மீண்டும் யாழ். பிராந்தியத்தின் பிராந்திய முகாமையாளராக இருந்த காலங்களில் மேலதிகாரிகள் முதற்கொண்டு கீழ் மட்ட உத்தியோகத்தர் வரை அதற்கு மேலாக வாடிக்கையாளர் வரை அவர்களது இதயங்களில் என்றுமே மறக்க முடியாத பல அடையாளங்களை தடயங்களைப் பதித்து கடந்த 28.02.2013 இல் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆனால் ஓய்வு பெற்றுள்ளாரே தவிர ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார் என்று கூற முடியாத படி அவர் அமுல்படுத்திய பல திட்டங்கள் எங்களது நாளாந்த கருமங்களில் இரண்டறப் பிணைந்துள்ளன.

முகாமைத்துவம் பற்றி Marry parker follett, E.F.L Breach, Knootz, Ordonal ஆகியோரது கருத்துக்களைக் கோட்பாட்டு ரீதியாகக் கற்றவர்களுக்கு எஸ். பத்மநாதன் முகாமைத்துவம் நடைமுறை ரீதியான அனுபவங்களைத் தந்தமையும் எமது நாட்டிற்கு எமது பிரதேசத்திற்கு ஏற்றதான வழிமுறைகளை அவர் தனது வழியில் தனக்கு சாத்தியமான முறையில் பிரயோகித்து வெற்றி கண்டதையும் நாம் பெருமையுடன் ஏற்றுக் கொள்கின்றோம்.

வெறுமனே சுற்றுநிருபங்களை மனனம் பண்ணி வாய்ப்பாட்டு ரீதியாக கூறிக் கொண்டு உத்தரவுகளை விடுத்துக் கொண்டு இருக்காமல் அவசர அவசிய தேவைகளுக்கேற்ப சில முடிவுகளை எடுப்பதில் சிறந்த தொரு நிர்வாகியாக அவர் திகழ்ந்துள்ளார்.

**"வழங்கப்பட்டிருக்கும் பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் பயன்படுத்தி நிறுவனங்கள் தமது நோக்கத்தினை அடைந்து கொள்ள வகை செய்யும் கருமம் எதுவோ அதுவே முகாமைத்துவம்"** என்பது நடைமுறையில் நாம் அவரிடமிருந்து கற்றுக் கொள்ளும் பாடமாகும்.

வங்கி வேலைகளில் எப்படியெல்லாம் இறுக்கத்தையும் தேவையான போது நெகிழ்ச்சித் தன்மையும் காட்டினாரோ அதே போன்று ஊழியர்களது நன்மை தீமைகளைகளில் நெருக்கடியான நேரங்களில் கூட கலந்து கொள்ளும் பண்பையும் நாம் கண்டு வியந்துள்ளோம்.

பல துறைகளில் ஈடுபாடு உள்ளவரி டையே நடத்திய போட்டிகள், வழங்கப்பட்ட பரிசுகள், சான்றிதழ்கள் இலை மறைகாய்களாக இருந்த வங்கி ஊழியரது திறமைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தன.

வங்கியினூடாக உத்தியோகபூர்வமாகக் கொடுக்கக் கூடிய உதவிகளையும் யாழ். பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் திரு.எஸ். பத்மநாதன் கூடுதலான கரிசனையுடன் செயற்பட்டவர்.

தான் ஓய்வு பெறும் இத்தருணத்தில் கூட இப்பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக மக்கள் வங்கி முகாமையாளர் குழாத்திடம் ஒரு நிதியத்தை தொடக்கி வைத்து சில பொது பணிகளையும் ஆரம்பித்து வைத்துள்ளமை அவரது பொது நலத்தின்பால் அவர் கொண்டிருக்கும் அளவற்ற ஆர்வத்தை துலாம்பராமாக எடுத்துக் காட்டுகின்றது.



எல்லோருடனும் நகைச்சுவையுடன் உரையாடி சூழலைக் கலகலப்பாக வைத்திருப்பதில் கைதேர்ந்தவர். அதே நேரம் போர்க்குணம் மிக்கவர். அவருள்ளே மூர்க்கத்தனமான ஒரு போராளி இருக்கிறான் என்பதை ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை நாம் கண்டு வந்துள்ளோம்.

மாதாந்தோறும் முகாமையாளர் கருத்தரங்கில் அவர் ஆற்றிய உரைகள் பெறுமதி மிக்கவை நூலருவில் கொண்டு வரத் தகுதியானவை. அவர் ஓய்வு பெற்றாலும் அவ்வுரைகள் நம் எல்லோரையும் சரியான பாதையில் பயணிக்கச் செய்து எமது இலக்கை அடைய வழிசமைக்கும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

**பி.கிருஷ்ணானந்தன்
முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பருத்தித்துறை.**

## அமைச்சர் சுசில் நைரோபி பயணம்

(கொழும்பு)

சூழல் பாதுகாப்பு அமைச்சரும் முன்னாள் எரிசக்தி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த நைரோபிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நைரோபியில் நடைபெறும் சூழல் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச பயிற்சிக்கருத்தரங்கொன்றில் கலந்துகொள்வதற்காகவே அமைச்சர் இங்கு சென்றுள்ளார். (அ-2)

## கட்டுத் துவக்கு வெடித்து இருவர் காயம்

உரப்பையொன்றில் சுற்றிவைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு பேருந்து டயரில் சிக்குண்டு வெடித்ததில் பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் புளத்சிங்கள பேருந்து தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (அ-2)

## லங்கா சமசமாஜ கட்சி பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக்கு புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிறு யாழ்ப்பாணக்கட்சி காரியாலயத்தில் (137, கண்டி வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளது.

எனவே கட்சியின் தோழர்களையும் புதிதாக இணைய விரும்பும் தோழர்களையும் தவறாது சமூகம் அளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளதுடன் இக் காரியாலயம் கிழமை நாட்களில் 10 மணி முதல் 12.30 வரை மக்களை சந்திப்பதற்காக திறந்திருக்கும் எனவும் இணைப்பாளர் நடராஜா தமிழ் அழகன்

# பிலிப்பைன்சுக்கும் உதவியது இலங்கை

## 25 ஆயிரம் அமெ. டொலர்

பிலிப்பைன்சுக்கு இலங்கை 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

பிலிப்பைன்சில் 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வீசிய போபா எனும் சூறாவளியினால் அழிவுக்குட்பட்ட வீடுகளை திருத்துவதற்காக இலங்கை 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடை நிதிக்கான காசோலையை பிலிப்பைன்சுக்கான இலங்கைத் தூதுவர் டெனட்கூரே பிலிப்பைன்ஸ் குடியரசின் வெளிவிவகார செயலாளரிடம் 2013 ஆம் ஆண்டு கடந்த மாதம் 27 ஆம் திகதி மணிலாவிலுள்ள வெளிவிவகார திணைக்களத்தில் வைத்து கையளித்தார்.

இந்த சூறாவளியினால் பல்லாயிரக்கணக்கான பிலிப்பைன்ஸ் மக்களின் வாழ்க்கை மிக மோசமாக பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மாணவர்கள் விளையாட்டுக்களில் பங்கேற்பது கட்டாயம்- அரசாங்கம்

இந்த வருடம் பாடசாலை மாணவர்கள் ஏதேனும் விளையாட்டுக்களில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நோயற்ற மாணவர்கள் சமுதாயமொன்றை ஏற்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைகளின் ஒவ்வொரு மாணவர்களுக்கும் உடல் நிலையில் ஏற்படுகின்ற முன்னேற்றம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் அம்முன்னேற்றம் குறித்து ஆராயவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மாணவர்களுக்கு தொற்றா நோய்கள் ஏற்படுவதனை குறைத்துக் கொள்ளும் நோக்கில் விளையாட்டு பாடத்தினை பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் விளையாட்டுபாடத்திட்டத்தினை இணைத்துக் கொள்வதுடன் விளையாட்டு பாடத்திற்கும் புள்ளிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (அ-2)

# குற்றச்சாட்டுச்சாட்டுக்களை முறியடிக்கும் தெளிவான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை

## அமைச்சர் விமல் கொதிப்பு

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான குற்றச் சாட்டுக்களை எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு தெளிவான திட்டம் கிடையாது.

பயங்கரவாதத்தை விடவும் பொருளாதார யுத்தம் கடுமையானது என வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களை எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு தெளிவான திட்டம் கிடையாது.

மேற்குலக நாடுகளின் குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு அரசாங்கம் தந்திரோபாயங்களை பின்பற்ற வேண்டும்.

அரசாங்கத்திற்கு இந்த விடயங்கள் குறித்து அக்கறையில்லை என்றால் ஏன் தாம் மட்டும் உரக்கக் குரல் கொடுக்க வேண்டும்.

இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றி வருகின்றன.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேசவிரோத சக்திகள் இயங்கி வருகின்றன. அதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவின் நடவடிக்கைகளினால் நாட்டின் பொருளாதார நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

# அரச இசை விருதுக்காக விண்ணப்பிக்கலாம்

கலாசார மற்றும் அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகத்தின் அரச இசைக்குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள 2013 ஆம் ஆண்டுக்கான அரச இசை விருது விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2011 முதல் 2012 வருடத்தில் வெளிவந்த படைப்புகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான சிறந்த பாடல் (ஆண்) தனி, சிறந்த பாடல் (பெண்) தனி, சிறந்த பாடலாக்கல் மற்றும் இசையமைப்பு, சிறந்த பாடல் வரிகள் ஆக்கம், சிறந்த திரை ஒளி ஆக்கம் (இயக்கம்), சிறந்த இறுவெட்டு (தயாரிப்பு), குறைந்தபட்சம் 10 பாடல்களாக இருத்தல் வேண்டும்.

சிறந்த சிறுவர் பாடல் சிறுவர் பாடல் (சிறுவன்) தனி, சிறந்த சிறுவர் பாடல் (சிறுமி) தனி, (வயதெல்லை 8 தொடக்கம் 15 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்), பிரபல சிறுவர் பாடல் வரிகள் ஆக்கம் (திறந்த சிறுவர் பாடலாக்கல் மற்றும் இசையமைப்பு (திறந்த), சிறந்த சிறுவர் திரை ஒளி ஆக்கம் (திறந்த)-(இயக்கம்), சிறந்த சிறுவர் இறுவெட்டு (தயாரிப்பு), சிறந்த கிராமிய பாடல் (ஆண்) தனி, சிறந்த கிராமிய பாடல் (பெண்) தனி, சிறந்த கிராமிய பாடல் நவீன வடிவம், (இதற்காக இசை மற்றும் இசை உபகரணங்கள் பாவித்தல்), சிறந்த வானொலி இசை நிகழ்ச்சி, சிறந்த குழுப்பாடல் ஆகியவற்றுக்கு விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

2013 அரச இசை விருது வழங்கலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் அனைத்து விண்ணப்பதாரிகளும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி செய்தி குறிப்பிடப்பட்ட இறுவெட்டுடன் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கலாசார திணைக்களம் கேட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற மீறல்கள்
# இறுகும் இலங்கையின் கழுத்து

தற்போதைய இறுக்கமான சூழ்நிலை காரணமாக இலங்கையானது சீனாவுடனான தனது இராஜதந்திர உறவுகளை மேலும் நெருக்கமடையச் செய்ய விரும்பலாம். எந்தவொரு விடயத்திலும் இலங்கைக்கு எதிரான வெளிநாடுகளின் விமர்சனமும் அழுத்தமும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தையே உண்டுபண்ணும்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் ஆகின்ற போதிலும்கூட, இங்கு சமாதானம் என்பது இன்னமும் எட்டப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. இந்நிலையில் இலங்கையில் போர் மீறல்கள் இடம்பெறவில்லை என அதன் அதிகாரம் மிக்க தலைவர்கள் குறிப்பாக, இலங்கையின் பாதுகாப்புச் செயலர் உறுதி தெரிவித்துள்ள போதிலும்கூட, தற்போது 2009 இல் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் தொடர்பான புதிய சான்றுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் இறுதிக்கட்டத்தில் அமெரிக்கா தலைமையில் இலங்கை அரசாங்கம், தன் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படவுள்ளது. இத்தீர்மானத்தை சரணடைந்தோரைக் கொல்வதற்கான கட்டளை பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்படவில்லை எனவும், தனது படைகள் இனப்படுகொலையை புரியவில்லை எனவும், ஒரு ஆண்டுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலர் அறிவித்திருந்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் 10,000 வரையான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும் 1000 பேர் வரை காணாமற் போனதாகவும் தமிழ் அரசியற் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையின் வடக்கில் மக்களின் புதைகுழிகள் பல இன்னமும் வெளிப்படுத்தப்படாது உள்ளதாகவும் இங்கு பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் அரசியற் தலைவர்கள் கூறுகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகனான 12 வயது நிரம்பிய பாலச்சந்திரன் பிரபாகரன் இலங்கை இராணுவப் படைகளின் காவலில் வைக்கப்பட்டு, பின்னர் இறுதியில் இந்தப் படைகளால் படுகொலை செய்யப்படும் புதிய காட்சிகளைக் கொண்ட புதிய காணொலி ஒன்றை சனல்4 தொலைக் காட்சி சேவையானது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடலில் திரையிட்டுள்ளது.

12 வயது நிரம்பிய பாலச்சந்திரன் என்ற சிறுவன் முதலாவது ஒளிப்படத்தில் பீதியுடன் காணப்படுகிறார். இரண்டாவது ஒளிப்படத்தில் அவரைச் சுற்றி இலங்கை இராணுவப் படையினர் காவல் காக்க அந்தச் சிறுவன் ஏதோ சாப்பிடுகிறார். இறுதி ஒளிப்படத்தில் இந்தச் சிறுவன் நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களுடன் கொல்லப்பட்டுக் கிடக்கிறான்.

இந்த ஒளிப்படங்கள் படுகொலை இடம்பெற்ற இடத்தில் நின்ற இலங்கைப் படையினரால் தமது கைத் தொலைபேசிகளில் எடுக்கப்பட்டவை போன்று தெரிகின்றன. இந்த ஒளிப் படங்கள் மூலம் இந்தச் சிறுவன் படுகொலை செய்யப்பட்டுள்ளான் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இந்தச் சிறுவனைப் படுகொலை செய்வதற்கான கட்டளை இராணுவத்தின் உயர்மட்டத்திலிருந்தா அல்லது அரசியலின் உயர்மட்டத்திலிருந்தா வழங்கப்பட்டது என்பதை அறிவது நியாயமானது.

இலங்கையில் இடம்பெறும் ராஜபக்சாக்களின் சர்வாதிகார ஆட்சி தொடர்பாக அனைத்துலக நெருக்கடிகள் குழு, தனது புதிய அறிக்கையில் விவாதித்துள்ளது. இலங்கையில் வன்முறைகள் தொடரப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்புப் படைகளான இராணுவம், காவற்துறை, புலனாய்வு அமைப்புகள் போன்றன அங்கு வாழும் தமிழ் மக்களை விசாரணைகளின்றி தடுத்து வைத்தல், வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுதல், துன்புறுத்தல்கள், சித்தரவதைகள், பாலியல் வன்புணர்வுகள் என்பன மேற்கொள்ளப்படுவதாக, இதனால் பாதிக்கப்பட்டவர்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனையோர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களைக் கொண்டு கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி அன்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.





இதில் பாதிகப்பட்ட 75 பேரால் வழங்கப்பட்ட வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களுள் பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இலங்கை பாதுகாப்பு படையால் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, சிகரெட்டால் உடல்களில் சுடப்பட்டு நரக வேதனையை அனுபவித்த 31 பேரின் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனால், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை இலங்கையின் அதிகார பீடம் மிகக் கோபத்தோடு நிராகரித்துள்ளது. இலங்கைக்கு எதிராக பேரவையில் தீர்மானம் முன்வைக்கப்படாது தடுப்பபதில் இலங்கை அரசாங்கம் தோல்வியடையலாம். இதனால் இலங்கையானது சீனாவுடனான தனது இராஜதந்திர உறவுகளை மேலும் நெருக்கமடையச் செய்ய விரும்பலாம். எந்தவொரு விடயத்திலும் இலங்கைக்கு எதிரான வெளிநாடுகளின் விமர்சனமும் அழுத்தமும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தையே உண்டுபண்ணும்.

இலங்கையின் உள்நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் ஊடகங்கள், மத அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கங்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசாங்கத்தின் எதிர்க்கட்சி அமைதிகாத்து வருகிறது. பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் போரை வெற்றி கொண்டு நாட்டில் மிகப்பலமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியதற்காக ராஜபக்சாக்கள் தொடர்ந்தும் போற்றப்படுகிறார்கள். 'இலங்கைக்கு எதிரான வெளிநாடுகளின் விமர்சனங்கள் தமது நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கான அனைத்துலக சதி என பெரும்பான்மை சிங்கள மக்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், ஏமாற்றகரமான மாற்றத்தை எவரும் எதிர்பார்க்க முடியாது. பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நவம்பரில் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு இடம்பெறவுள்ளது. இதனை இந்த ஆண்டு இலங்கையில் வைப்பதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அதிகம் வாழும் இந்தியாவிலுள்ள தமிழ் அரசியற் கட்சிகள், இலங்கையில் வாழும் தமது சகோதர உறவுகள் மீது இந்தியா கரிசனை காட்ட வேண்டும் என அழுத்தம் கொடுக்கின்றனர்.

இந்நிலையில் இந்தியா உள்ளடங்கலாக பல்வேறு நாடுகள் இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு இடம்பெறுவதை எதிர்த்து நிற்பார்கள்என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இதேவேளையில் இந்த உச்சிமாநாட்டை தனது நாட்டில் நடத்துவதன் மூலம் அனைத்துலகத்தின் புகழையும் பாராட்டையும் பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை அரசு கருதுகிறது. கிடைக்கப்பெற்றுள்ள இலங்கை மீதான போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தெளிவான வெளிப்படையான ஆதாரங்கள் இலங்கையின் நற்பெயருக்கு மேலும் கறை ஏற்படுத்துகின்றன.



இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கடந்த ஆண்டில் முன்வைக்கப்பட்ட, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்தது போன்று தற்போதும் இதனை ஆதரிக்கவுள்ளன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலர் போன்றோரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ள இலங்கை இராணுவத்தினர், போரின் இறுதிக் கட்டத்தில் பல்வேறு யுத்த மீறல்களைப் புரிந்ததற்கான புதிய ஆதாரங்களை மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் வெளியிட்டுள்ளனர். இலங்கை அரச படைகள் போர் முடிவடைந்த பின்னரும்கூட தமிழ் மக்களுக்கு எதிராக சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் பல்வேறு துன்புறுத்தல்களை மேற்கொண்டு வருகின்றமை ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சரணடைந்த தமிழ்ப்பெண்களை நிர்வாணமாக்கி, பாலியல் வல்லுறவுக்கு உற்படுத்திய காட்சிகளை பிரித்தானிய தொலைக்காட்சி சேவையான சனல்4 ஏற்கனவே ஆதாரங்களுடன் வெளியிட்டிருந்தது. 2009 இல் யுத்தம் முடிவடைந்த போது இவை பதிவாக்கப்பட்டிருந்தன. ஆனால், இவ்வாறான குற்றச்சாட்டை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்திய ஊடகம், முற்றிலும் பொய்யான தகவலை வெளியிட்டதாகவும் பொது மக்கள் மற்றும்

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் மைத்திரிபாலவுக்கு எதிராக மகிந்தவும் கோத்தாவும் சூழ்ச்சி - கருணாரட்ன குற்றச்சாட்டு

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஜனாதிபதி மகிந்தவும் படைத்துறைச் செயலாளர் கோத்தபாயவுமே சூழ்ச்சிகளை வகுத்து வருகின்றனர் எனக் குற்றச்சாட்டும் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கொலை அச்சுறுத்தலின் பின்னணியிலும் இவர்கள்தான் செயற்படுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கான முதற்கட்ட நடவடிக்கையே அமைச்சர் பசிலுக்கு தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டமையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனது சுயரூபத்தை கலைப்பதற்கு ஊடகங்களின் ஊடாக சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது கைகூடவில்லையானால் என்னைக் கொலை செய்வதே அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கும். தற்போதே எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிடும் போது நவசமசமாஜக் கட்சி தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு,

மைத்திரிபால சொல்வதைப் பார்த்தால் அவருக்கு அரச உயர் மட்டத்தில் இருந்தே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் ஜனாதிபதியும் படைத்துறைச் செயலாளரும் உள்ளனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அலரிமாளிகையில் வைத்தே அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சூழ்ச்சி வகுக்கப்படுகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே அவருக்கு எதிராக சூழ்ச்சிகள் அரச மட்டத்தில் நடக்கின்றன. அரசின் விரோத செயற்பாடுகளை மைத்திரிபால சிறிசேன அண்மைக்காலமாக எதிர்த்து வந்தார்.

முஸ்லிம் விரோத செயற்பாட்டையும் அவர் கண்டித்தார்.

எனவே அவரின் செயலாளர் பதவியை பறிப்பதற்கு திட்டம் வகுக்கப்படுகின்றது. இதன் முதற் கட்டமாக பசிலுக்கு தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால தூக்கப்பட்ட பின்னர் பசிலே அந்த இடத்துக்கு வருவார் என்று விக்ரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நவிப்பிள்ளையின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது - ஜேர்மனி

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் மீது இலங்கை அரசாங்கம் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்று ஜேர்மனி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் 22 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய ஜேர்மனின் ஐக்கிய நாடுகளுக்கான தூதுவர் ஹான்ஸ் எச்சஹ மெச்சர் நவநீதம்பிள்ளை ஏற்றுக்கொள்ள முடியாத விமர்சனங்களுக்கு முகங்கொடுப்பதாக குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் அமர்வின் போது அமைச்சர் மஹிந்த சமரசிங்க நவநீதம்பிள்ளையின் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே ஜேர்மனின் தூதுவர் தமது கருத்தை வெளியிட்டார்.

நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் பக்கச்சார்பான வகையில் நடந்து கொள்வதாக மஹிந்த சமரசிங்க கடுமையான வார்த்தைகளால் குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பொலிஸாருக்கு எதிராக 601 முறைப்பாடுகள்

பொலிஸ் திணைக்களத்திற்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் 601 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டில் இவ்வாறு பொலிஸாருக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். உரிய முறையில் விசாரணை நடத்தாமை குறித்து 180 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அதிகார துஷ்பிரயோகம், ஒரு பக்கச்சார்பாக செயற்பட்டமை, சட்ட விரோத கைதுகள், போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# சமரசிங்கவின் கருத்துக்கள் அனைத்தும் பிழையானவை

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

வடக்கில் இராணுவ பிரசன்னம், மீள்குடியேற்றம், காணிப்பிரச்சினை, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக்கள் குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் சபையில் கூறிய விடயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து உரிய தீர்வை தமிழர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் மஹிந்த சமரசிங்கவின் கருத்துக்கள் அதனை எதிர்பார்க்க முடியாத தோற்றத்தை கொடுத்துள்ளதாக கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் சர்வதேசத்தை ஏமாற்றி வருகிறது.

இதனை தொடர்ந்தும் அரசாங்கத்தினால் முன்கொண்டு செல்ல முடியாது. மஹிந்த சமரசிங்க கூறிய கருத்துக்கள், தகவல்கள் அனைத்தும் பிழையானவை.

எனவே, இது தொடர்பில் ஜெனீவாவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச நாடுகளுக்கு உரிய விளக்கங்களை வழங்கும்.

வடக்கில் இடம்பெயர்ந்தோர் அனைவரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

எனினும் இன்னும் யாழ்ப்பாணத்தில் 14 இடம்பெயர்ந்தோர் முகாம் இயங்கி வருவதாக செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# அமைச்சர் மைத்திரிபால தனது பாதுகாப்பு குறித்து ஜெனீவாவில் முறையிடவேண்டும்

## ரணில் விக்ரமசிங்க

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மனித உரிமைகள் மீறப்படுமானால் அவர் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் முறையிட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிறிசேன தொடர்பாக தனியார் பத்திரிகை ஒன்று தமது வாழ்க்கையை சிதறடிப்பதாக குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் அவரின் வாழ்க்கையை லேக்ஹவுசின் அரசாங்க பத்திரிகைகளை காட்டிலும் தனியார் பத்திரிகை சிதறடிக்கிறதா? என்று ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பினார்.

அரசியலில்எதிரிகளாக இருக்கின்ற போதும் மைத்திரிபால சிறிசேனவின் கூற்று தொடர்பில் அவதானிக்க வேண்டியது அவசியமானதாகும்.

எனவே, மைத்திரிபால தமக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறுவாராக இருந்தால் அவர் ஜெனீவாவுக்கு சென்று அது தொடர்பில் கூற வேண்டும் என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# இறைச்சி விநியோக இடத்தின் மீது பொதுபலசேனா தாக்குதல்

அனுமதியின்றி இறைச்சிக்காக மிருகங்கள் கொலை செய்யப்படுவதாக கூறப்படும் இடம் ஒன்றின் மீது பொது பலசேனா அமைப்பினர் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

கொழும்பில் உள்ள இந்த இடத்தில் இருந்து தெமட்டகொட பகுதியில் உள்ள வீடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 300 கிலோ வரையில் இறைச்சி விநியோகிக்கப்படுவதாக பொதுபல சேனாவின் பௌத்த பிக்கு ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந் நிலையில் பொலிஸார் குறித்த இடத்துக்கு சென்று விசாரணைகளை நடத்தியுள்ளனர். ஏற்கனவே பேருவளை பகுதியிலும் புத்தரின் பெயரில் விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டதாக கூறி பொதுபல சேனா அமைப்பினர் ஹோட்டல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)




★1575-இந்தியாவின் முகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.

★1833-அகிலத்திரட்டு அம்மானையின்படி நாராயணனின் அவதாரமாக அய்யா வைகுண்டர் திருச்செந்தூரில் பிறந்தார்.

★1857-பிரான்சும் ஐக்கிய இராச்சியமும் சீனா மீது போரை அறிவித்தன.

★1905-ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையை ஏற்படுத்த இணங்கினான்.

★1918-முதலாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பை முடிபுக்குக் கொண்டுவர ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யா ஆகியன உடன்பாட்டிற்கு வந்தன.

★1923-டைம் இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.

★1933-ஜப்பானில் ஹொன்ஷூ என்ற இடத்தில் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 3 ஆயிரம் பேர் வரையில் இறந்தார்கள்.

★1938- சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.

★1939- மும்பையில் மகாத்மா காந்தி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

★1945- இரண்டாம் உலகப் போர்: முன்னர் நடுநிலையாக இருந்த பின்லாந்து அச்சு நாடுகளுக்கெதிராக போரை அறிவித்தது.

★1969- நாசாவின் அப்பலோ 9 விண்ணில் ஏவப்பட்டது.

★1971- இந்தோனேசியா- பாகிஸ்தான் போர் ஆரம்பமானது.

★1974-ரோமன் கத்தோலிக்கம் மற்றும் லூத்தரன் ஆகிய கிறிஸ்தவ மதப் பிரிவுகள் இரண்டும் இணைந்தன.

★1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல ஆதரவாக லாத்வியாவின் 74% மக்களும் எஸ்தோனியாவின் 83% மக்களும் வாக்களித்தனர்.

★1992-பொஸ்னியா என்ற நாடு உருவாக்கப்பட்டது.

★2002-சுவிட்சர்லாந்து ஐ.நாவில் இணைவதற்கு ஆதரவாக சுவிட்சர்லாந்தில் மக்கள் வாக்களித்தனர்.

### பிறப்புக்கள்

★1839-ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ.1904)

★1845-கியார்கு கேன்ட்டர், கணிதவியலாளர் (இ.1918)

★1847-அலெக்சாண்டர் கிரஹாம் பெல், கண்டுபிடிப்பாளர் (இ.1922)

★1867-பாண்டித்துரைத்தேவர், தமிழறிஞர் (இ.1911)

★1950-திக்குவல்லை கமால், ஈழத்து எழுத்தாளர்.

★1955- கணபதி கணேசன், தமிழ் இதழியலாளர் (இ.2002)

★1970- இன்சமாம் உல்ஹக், பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்

### இறப்புக்கள்

★1703-ராபர்ட் ஹூக், ஆங்கிலேய அறிவியலாளர் (பி.1635)

★1707-ஔரங்கசீப், மொகாலயப் பேரரசர் (பி.1618)


★1996-சி.சிவஞானசுந்தரம், சிரித்திரன் ஆசிரியர்

★1999- ஜேராட் ஹேர்ஸ்பேர்க், நோபல் பரிசு பெற்றவர் (பி.1904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவுவிழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் சஞ்சிகையின் முதற்பிரதியை பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரனிடமிருந்து கலாபூஷணம் சு.சண்முகவடிவேல் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)






# நிகழ்வின் நிழல்கள்










யாழ்.கட்டுவன் சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களது விளையாட்டு நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற இப்பாடசாலையின் ஆசிரியர் ஆர்.மைக்கல் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கியபின் நிற்பதையும் அருகில் அதிபர் துரைசிவஞானம் உள்ளிட்ட ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)




இமை நிறுவனத்தின் பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருது பெற்ற மாணவர்கள் சான்றிதழ்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.




மு/உடையார்கட்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற சின்னம் சூட்டும் விழாவின்போது...





நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட தேசிய சேவை இளைஞர் மன்றங்களுக்கு அண்மையில் நல்லூர் பிரதேச கேட்போர் கூடத்தில் வைத்து உபகரணங்கள் வழங்கப்பட்ட போது...





பருத்தித்துறை நகரசபையின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது... (படங்கள்:- எஸ்.செல்வதீபன், என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குமுதம்' மீது அவதூறு வழக்குத் தொடுத்தார் குத்தாட்ட நாயகி!



## ஆனந்த் இயக்கத்தில் ரஜினி

கே.வி.ஆனந்த் அடுத்து இயக்க போகும் படம் குறித்து பல்வேறு செய்திகள், தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. தற்போது அச்செய்திகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

EROS நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி கமல் ஜெயன் அளித்துள்ள பேட்டியில் ரஜினியுடன் நாங்கள் மூன்று படங்கள் ஒப்பந்தம் செய்து இருக்கிறோம். கோச்சடையான், ராணா ஆகிய படங்களைத் தொடர்ந்து ரஜினி நடிக்கும் புதிய படத்தினை கே.வி.ஆனந்த் இயக்க இருக்கிறார்.

படத்தின் தலைப்பு, யார் எல்லாம் ரஜினியுடன் நடிக்கிறார்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை. ரஜினி - கே.வி.ஆனந்த் இணையும் படத்தின் பட்ஜெட் குறித்து எதுவும் இன்னும் முடிவு செய்யவில்லை என்று கூறி இருக்கிறார்.

## மீண்டும் முருகதாஸ் கூட்டணி

துப்பாக்கி கூட்டணியான விஜய் - ஏ.ஆர். முருகதாஸ் மீண்டும் இணைவது உறுதியாகி இருப்பது தான் தமிழ் திரையுலகின் 'லேட்டஸ்ட்' தகவலாக இருக்கிறது. துப்பாக்கி படத்தின் வசூல் மழையால் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர் அதிபர்கள் என அனைவரது முகத்திலும் சந்தோஷ ரேகைகள் படர்ந்து இருந்தன.

இந்நிலையில் ஏ.ஆர்.முருகதாஸ், துப்பாக்கி படத்தின் இந்தி ரீமேக்கான PISTOL படத்தினை முடித்துவிட்டு அஜித் - ஏ.ஆர்.முருகதாஸ் கூட்டணி இணையும் என செய்திகள் வெளியாகின.

தற்போது அதே கதையினையோ அல்லது வேறு கதையையோ, விஜய்யை வைத்து இயக்க திட்டமிட்டு இருக்கிறாராம் ஏ.ஆர்.முருகதாஸ். தலைவா, ஜில்லா ஆகிய படங்களை முடித்து விட்டு விஜய்யும், இந்தி PISTOL படத்தினை முடித்துவிட்டு ஏ.ஆர்.முருகதாஸும் இணைகிறார்கள். ஏ.ஆர்.முருகதாஸ் படம் என்பதால், விஜய்யும் உடனே திகதியை ஒதுக்கி கொடுத்து இருக்கிறாராம். 2014இல் இப்படம் ஆரம்பமாகுமாம்.



படம் : ஒன்பதுல குரு
லட்சுமிராய், வினய்



குத்தாட்ட நாயகி லட்சுமிராய்


தான் சொல்லாத ஒன்றை குமுதம் தவறாக வெளியிட்டிருந்ததாகவும் இதற்காக அந்தப் பத்திரிகை மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இனி தன்னைப் பற்றி அந்தப் பத்திரிகை எதுவும் எழுதக் கூடாது என்று கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் குத்தாட்ட நடிகை லட்சுமிராய். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, 'குமுதம்' சஞ்சிகை லட்சுமிராயைப் பற்றிய செய்திகளை வெளியிட இடைக்காலத் தடை விதிப்பதாக தீர்ப்பு வழங்கினார்.

'ஒன்பதுல குரு' என்ற படத்தின் இறுதிக்கட்ட சூட்டிங் முடிந்ததால், அன்றைக்கு படப்பிடிப்பில் பங்கேற்ற அனைவருக்கும் இரவு விருந்துபசாரம் கொடுக்கப்பட்டதாகவும் விருந்துபசாரம் முடிவில் கதாநாயகன் வினய் எனக்கு தங்குவதற்கு நட்சத்திர ஹொட்டலில் இடம் ஒதுக்கவில்லையா? நடிகை லட்சுமிராய்க்கு மட்டும் தங்குவதற்கு இடம் கொடுக்கிறீர்களே என்று கேட்டதாகவும், இறுதியில் தனக்காக ஒதுக்கப்பட்ட அறையில் கதாநாயகன் வினய் தங்கலாம் என்று லட்சுமிராய் கூறியதாகவும் குமுதம் சஞ்சிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

இது பொய்யானது. வேண்டுமென்றே எனது புகழுக்கு களங்கம் விளைவிக்க பொய் செய்தியை உள்நோக்கத்துடன் வெளியிட்டுள்ளனர். இதனால் எனது மனது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. என்னை பற்றி தொடர்ந்து செய்தி வெளியிட அந்த சஞ்சிகைக்கு தடை விதிக்கவேண்டும். ரூ. 30 லட்சம் நஷ்டஈடு தர அந்த சஞ்சிகைக்கு உத்தரவிட வேண்டும் என வழக்குத் தொடுத்தார் லட்சுமிராய். இதை விசாரித்த நீதிபதி வினோத்குமார் சர்மா லட்சுமிராய் பற்றி செய்தி வெளியிட பத்திரிகைக்கு இடைக்கால தடை விதித்தார்.

## விஸ்வரூபம் வசூல் 200 கோடி

விஸ்வரூபத்தில் கமல் மனைவியாக நடித்த பூஜா குமார் நியூ ஜெர்சியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவர் விஸ்வரூபம் படம் உலகம் முழுவதும் ரூ.200 கோடி (இந்தியப் பணம்) வசூல் செய்துள்ளதாக தெரிவித்தார். கமல்ஹாசன் விஸ்வரூபம்-2 வேலையில் மும்முரமாக உள்ளார். இந்த ஆண்டே விஸ்வரூபம் இரண்டாம் பாகத்தை ரிலீஸ் செய்ய அவர் முடிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜய் நடிக்கும் தலைவா படத்தின் இயக்குனர் பெயரும் விஜய்தான். இதையடுத்து இப்போது இன்னொரு விஜய்யும் இந்த படத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல பிரபல பின்னணி பாடகர் ஜேசுதாஸின் மகனான விஜய் ஜேசுதாஸ்தான். இப்படத்தில் விஜய்யுடன் மோதும் வில்லனாக களமிறங்குகிறார்.

3 விஜய்

## துப்பாக்கி வசூல் 180 கோடியாம்..?

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய், காஜல் அகர்வால் நடித்த துப்பாக்கி படம் ரிலீஸாகி 100 நாட்களை கடந்துள்ளது. இந்நிலையில் துப்பாக்கி படம் இந்தியாவில் மட்டும் ரூ.180 கோடி (இந்தியப் பணம்) வசூலித்துள்ளதாக ஈராஸ் இன்டர் நெஷனல் அறிவித்துள்ளது. இதன் மூலம் ரூ.100 கோடி வசூல் சாதனை செய்த நான்காவது தமிழ் படம் என்ற பெருமையை துப்பாக்கி பெற்றுள்ளது. துப்பாக்கி படம் நவம்பர் மாதம் 13ஆம் திகதி உலகம் முழுவதும் 1,500 திரைகளில் திரையிடப்பட்டது. உண்மையில் இப்படம் இவ்வளவு வசூலை அள்ளி வழங்கியதா என்ற கேள்வி திரையுலகத்தினரிடையே எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீமரதப் பெருஞ்சாந்தி காணும் நீர்வைமணி

எல்லா உயிர்கள் மேலும் அன்பைச் செலுத்தி வாழ்பவரையே அந்தணர் என்ற சொல்லால்வள்ளுவம் குறிக்கின்றது. ஆனால், அந்தணர் எல்லோரும் பிராமணராவரோ என்றால் வள்ளுவத்தை விளங்கிக் கொண்டவர்கள் இல்லை என்றே பதிலளிப்பர். இதன் மறுதலையும் உண்மையாக இருப்பதில்லை. அந்தணர் என்ற சொல் ஒரு சாதியினரைச் சுட்டவில்லை என்பதே இங்கு வெளிப்படும் செய்தி.

ஆயினும் குணப்பொருத்தப்பாடு காரணமாக இரு சொற்களும் சுட்டுவது ஒரு வருண்த்தாரையே என்னும் வழக்கே நம்மவர் மத்தியில் உள்ளது. இவ்வழக்கின் மெய்ப்புத் தன்மைக்கு இன்றும் ஆதாரமாகக் கொள்ளத்தக்க ஒருவரை யாழ்ப்பாணம் நீர்வேலியில் தரிசிக்க முடியும். அவர்தான் நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள்.

போர்த்துக்கேயருடைய காலத்தில் இந்து மத சுதந்திரத்திற்குத் தடை நிலவியமையை யாவரும் அறிவர். அக்காலத்தில் இம்மண்ணில் வாழ்ந்த இந்துக் குருமார் ஆற்றொணாத துன்பத்தை அனுபவித்திருந்தனர்.

ஒல்லாந்தர் காலத்தில் இங்குள்ள இந்துக் கோவிற் பூசைப் பணிகளுக்காகத் தமிழகத்தில் இருந்து குருமார் வரவழைக்கப்பட்டுக் குடியேற்றப்பட்டமை போர்த்துக்கேயர் கால நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றது. இந்த வகையில் நீர்வைமணியினுடைய மூதாதையரும் தமிழகம் கும்பகோணத்தில் இருந்து இங்கு வரவழைக்கப்பட்டுக் குடியே ற்றப்பட்டவர்கள் என அறிய முடிகின்றது.

சித்திரபானு வருட மாசி மாத விசாக நட்சத்திரத்தில் (26.02.1943) காரைநகர் பிறந்த நீர்வைமணி மிகச் சிறுவயதில் தந்தையை இழந்தார். சகோதரியினுடைய அரவணைப்பில் வாழ்ந்ததுடன் திருமணம் செய்த நீர்வேலிக் கிராமத்தில் குடியேறினார். அத்தியார் இந்துக் கல்லூரியில் இளமைக் கல்வியைப் பெற்றார். இக்காலத்தில் (1960களில்) யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்க அமைப்பாளர்களுள் ஒருவராயும் கலா பரமேஸ்வரனுடன் இணைந்து இணைச் செயலாளராயும் விளங்கினார். இக்காலத்தில் அகில இலங்கை ரீதியாக வீரகேசரிப்பத்திரிகை நடத்திய திருக்குறள் கட்டுரைப் போட்டியில் முதல் இடம்பெற்று பெறுமதியான தங்கப் பதக்கம் ஒன்றும் பெற்றிருக்கிறார்.

எனினும் குடும்ப வறுமை காரணமாக தமது 17 ஆவது வயதில் இலங்கையின் மத்திய பகுதியில் கேகாலை எனும் இடத்திலுள்ள மாவன்னலை கதிரேசன் கோவிலில் பூசகராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆயினும் வடமொழியையும் தமிழையும் கற்கும் தனது நடவடிக்கையை நிறுத்தாது தொடர்ந்தார்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்கிறார் வள்ளுவப் பெருந்தகையார். பொருத்தமான காரியங்களை ஆற்றத்தக்க தகைமைபெற்ற பொருத்தமானவர்களிடமே அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்பது இதன் பொருள். ஆயினும் இறை சித்தம் பொருத்தமான இணைப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றது.

1977 இல் மாவன்னலையில் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாக வெறுங்கையுடன் நீர்வேலி திரும்பிய இவருக்கு நீர்வைச் செல்லக்கதிர்காம சுவாமி கோவிற் குருத்துவப் பணி கைகூடியது. விளக்கேற்ற



அடியார்கள் இன்றி (1980களில்) அல்லற்பட்ட இவ்வால யம் இன்று கொடியேற்றம் முதலாய பெருந் திருவிழாக்கள் நடைபெறுகின்ற-பக்தர்கள் அதிகளவில் கூடுகின்ற ஆலயமாக விளங் குகின்றது. இவ்வுருப் பெறுகையில் கணிசமான பங்கு நீர்வைமணியைச் சார்ந்தது.

சோதிடம் , வாஸ்து, ஆன்மீக ஆராய்ச்சி, தமிழியல் மற்றும் சமூகம் சார்ந்த பணிகளை முன்னெடுப்பதில் நீர்வைமணி ஏனைய குருமாருக்கு முன்னுதாரணமாக கொள்ளத் தக்கவர். வாக்கும் வாழ்வும் ஒன்றுபட வாழும் பெருந்தகையான இவர் இன்று கெஜாவல்லி அம்மா சமேதராகக் காணும் பெருஞ் சாந்தி வைபவம் சிறப்புற அமையட்டும்

ச.லலீசன்
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் த.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ந.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன், நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் வி.எஸ்.மாணிக்கராஜா, ஜே/109 கிராம சேவையாளர் இ.சந்திரகுமார் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

✷ ✷ ✷ ✷ ✷

(யாழ்ப்பாணம்)

யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் வி.ரி. ஜயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். சண்முககுலகுமாரர், பாடசாலையின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் க.கனகராசா, கௌரவ விருந்தினராக பாடசாலையின்பழைய மாணவியும் இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணித்தலைவியுமான செல்வி எஸ். தர்ஜினி ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

✷ ✷ ✷ ✷ ✷

(யாழ்ப்பாணம்)

யா/புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பால சுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் அச்சுவேலி கிளை முகாமையாகர் திருமதி.றொ.தவநாயகம், புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் வீ.கோபாலதாஸ், புத்தூர் கிழக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கோ.அனுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-5)

# பருத்தித்துறை மாவட்ட சாரணர் தின விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சாரணர் மாவட்ட இலங்கை சாரணர் சங்கத்தின் பேடன்பவல் தின விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ தொண்டைமனாறு வீரகத்தி பிள்ளை மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளரும் பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தலைவர் ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட முன்னாள் சாரண ஆணையாளர் ஆ. ஜெகநாதன் கலந்து கெள்ளவுள்ளார். இந்நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு பருத்தித்துறை மாவட்ட கிளைச்சங்க நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-5)

# சொத்து இழப்பு மதிப்பீட்டு பணியை பகிரங்கப்படுத்தக் கோரிக்கை

(றெட்பானா)

யுத்தத்தின் போது சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் முல்லை. மாவட்ட செயலக பிரதேசங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கடந்த ஒருமாத காலமாக இவ்விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதும் இப்பதிவுகள் தொடர்பாக கிராமப்புறங்களில் உள்ள மக்கள் பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சில கிராம சேவகர்களும் தமது கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அறியப்படுத்தவில்லை என மக்கள் மத்தியில் பலகுறைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எனவே, யுத்தத்தின் போது பல வழிகளிலும் இழப்புக்களைச் சந்தித்த அனைத்து மக்களும் தமது இழப்புக்களைப் பதிவு செய்வதற்கு மாவட்ட அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே இம்மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. (அ-3-260)

# இலவச யோகாசன வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன புதிய பிரிவிற்கான ஆரம்ப வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் திருமதி மாணிக்க ராஜசர்மா அனந்த லெட்சுமி தலைமையில் நடைபெறும்.

இப்பயிற்சியில் இருபாலாரும் பங்கேற்கலாம்.

இதற்கமைய ஆண்களுக்கான பயிற்சி வகுப்பு சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்கள் காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையும், பெண்களுக்கான பயிற்சி வகுப்பு செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்கள் காலை 7 தொடக்கம் 8 மணிவரையும் நடைபெறும்.

இதில் பங்கேற்க விரும்புவோர் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு 021 321 5393 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இப்பயிற்சி நெறியானது மூன்று மாத காலம் நடைபெறும். அத்துடன் வயது வேறுபாடின்றி அனைவரும் பங்கேற்கலாம். (அ-2)

# மன்னார் மாவட்ட மீனவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றம்

மன்னார் மாவட்ட மீனவர்கள் 3 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வாரம் மன்னாரில் மேற்கொண்ட ஆர்பாட்டத்தை தொடர்ந்து கடந்த 28 ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது மீனவாகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் நூர் முஹமட் முஹம்மது ஆலம் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து அதிகாரிகளினால் குறித்த 3 கோரிக்கைகளுக்கு ஒரு வார காலத்தினுள் தீர்வு பெற்றுத் தரப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திர தலைமையில் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான அவசர கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மீனவர்கள் முன்வைத்த மூன்று கோரிக்கைகள் கலந்துரையாடப்பட்டன. இதில் இந்திய மற்றும் உள்ளூர் இழுவைப் படகுகளின் தொழில் முறைகள் முற்றாக நிறுத்தப்படல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இந்திய மீனவர்கள் அத்துமீறி மன்னார் கடற்பரப்புக்குள் நுழைவதை தடுக்கும் முகமாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்பே அதனை அமுல்படுத்த முடியும் எனவும் முதலில் மன்னார் மாவட்டத்தில் தொழிலில் ஈடுபடுத்தப்படும் உள்ளூர் இழுவைப் படகுகளின் தொழில் முறைகள் முற்றாக உடன் நிறுத்தப்படுவதாக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கோரிக்கையான கடற்படையினரின் பாஸ் நடைமுறை நீக்கப்பட்டு அதற்கு பதிலாக கடற்றொழிலாளர் அடையாள அட்டை மாத்திரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது மீனவர் களுக்கு அட்டை, சங்கு, மீன் ஆகியவற்றை பிடிப்பதற்காக கடற்படையினரால் வழங்கப்படும் பாஸ் நடைமுறை நிறுத்தப்பட்டு குறித்த பாஸினை மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாவது கோரிக்கையான சிலின்டர் மூலம் கரையோரத்தில் தொழில் செய்வதை நிறுத்தி ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மாத்திரம் தொழில் செய்ய அனுமதித்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது வடபகுதி கடலில் இருந்து 20 கிலோ மீற்றருக்கு அப்பால் குறித்த சிலின்டர் தொழில் செய்ய முடியாததன் காரணத்தினால் மன்னார் மாவட்டத்தில் வடபகுதி கடலில் சிலின்டர் தொழில் தடை செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதி கடலில் கடற்கரையில் இருந்து 20 கிலோ மீற்றருக்கு அப்பால் சிலின்டர் தொழில் செய்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த தீர்மானங்கள் கடந்த வியாழக்கிழமை முதல் உடன் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் நூர் முஹமட் முஹம்மது ஆலம் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்தால் தமிழ் மக்களுக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவத்தினர் சுட்டுக்கொல்ல வில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமை குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக வாக்களிப்பதில் இந்தியா எடுக்கும் முடிவு குறித்து நான் இந்தியாவிடம் விவாதிக்கவில்லை எனவும் கூறினார்.**

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார். இதையடுத்து ஏராளமான விடுதலைப்புலிகள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தனர்.

பிரபாகரனின் 12 வயது இளைய மகன் பாலச்சந்திரன் இலங்கை இராணுவ முகாமில் பிடித்து வைக்கப்பட்டும் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டது போன்ற புகைப்படங்கள் வெளியாகின. இவற்றினை சனல்-4 வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போர் குற்றம் நடந்துள்ளதாகவும் ஜெனீவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமை குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு [illegible]வுள்ளது. பாலச்சந்திரனை இராணுவத்தினர் சுட்டுக் கொல்லவில்லை.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பேட்டியொன்றை அளித்துள்ளார்.



அதில் அவர் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரில் எந்தவித போர்க் குற்றங்களும் நடக்கவில்லை. சர்வதேச அமைப்புக்களும் ஊடகங்களும் தான் அதனை பெரிதாக்கிவிட்டன.

இலங்கை அரசுக்கு எதிராக இங்குள்ள எதிர்க்கட்சிகள் ஏனைய நாடுகளின் ஆதரவினை பெற்று இது போன்று பிரசாரம் செய்து வருகின்றன.

எகிப்து, துனீசியா,லிபியா, சிரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட கிளர்ச்சியை போன்று இலங்கையிலும் தூண்டி விட சதி நடக்கிறது. அதனை ஒருபோதும் இலங்கையில் நடக்க அனுமதிக்கமாட்டேன்.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவத்தினர் சுட்டுக்கொல்லப்படவில்லை. அப்படி நடந்திருந்தால் அது எனது கவனத்திற்கு வந்திருக்கும். நடந்த சம்பவத் தில் உண் மையிருந்தால் நான் பொறுப்பேற்கிறேன்.

போருக்கு பின்னர் 14 ஆயிரம் விடுதலைப்புலிகள் கைதாகி சிறையில் அகப்பட்டனர். தற்போது அவர்கள் விடுதலை செய்யப்பட்டு அரசின் மறுவாழ்வு திட்டத்தின் மூலம் அவர்கள் புதுவாழ்வு பெற்று வருகின்றனர்.

நான் அடிப்படையில் புத்தமதத்தினை சேர்ந்தவன். சகிப்பித்தன்மையும் இரக்க உணர்ச்சியும் எனக்கு உண்டு.

இங்குள்ள தமிழ் கட்சிகள் அனைத்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கீழ் இணைந்தால் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு நிச்சயம் கிடைக்கும்.

இலங்கை அரசியலமைப்பு சட்டம் 13 ஆம் திருத்தத்தின் படி இறுதி கட்ட போருக்கு முன்னர் தமிழர்களுக்கு அதிகார பகிர்வு வழங்கிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது தோல்வியில் தான் முடிந்தது.

வடக்கு மாகாணங்களில் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்படும். ஜெனீவாவில் நடந்து வரும் மனித உரிமை குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மா னம் குறித்து இந்தியா தனது கடமையை செய்யும்.

இலங்கை எப்போதுமே இந்தியா வின் நட்பு நாடுதான். எனினும் இது குறித்து இந்தியாவிடம் நான் விவாதிக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

# கூடங்குளம் அணு உற்பத்தி நிலையத்தில் அணுக்கசிவு?

இந்தியாவிலுள்ள கூடங்குளம் அணு உற்பத்தி நிலையத்தில் அணு கசிவு ஏற்பட்டுள்ளமை குறித்த தகவல்கள் கிடைத்துள்ளதாக கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 27 ஆம் திகதி இரவு முதல் கூடங்கு[illegible]ம் அணுமின் உற்பத்தி நிலைய த்தில் அணுக் கசிவு ஏற்பட்டுள்ளதாக குறித்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மைத் தகவல்களை மக்களுக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அணுமின் உற்பத்தி நிலையத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ள அரசாங்கம் அணுக்கசிவினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டுமென கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் 27 ஆம் திகதி கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் அணுக்கசிவு ஏற்படவில்லை என இலங்கை அணுசக்தி அதிகாரசபை யின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அணுக்கசிவு ஏற்படுமாயின் சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனம் மற்றும் இந்திய அரசாங்கம் ஆகியற்றினால் இலங்கை அணுசக்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்படுமென அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# மிகப் பழைமைவாய்ந்த ஏடுகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன

## இன்று பொறுப்பேற்கும் வைபவம்

அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து குருமார் அமைப்பு மற்றும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தினதும் அனுசரணையுடன் இரண்டாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த இந்து சமய ஏடுகளின் கணனி மயப் படுத்தப்பட்ட பிரதிகளை பொறுப்பேற்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 9 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகத்தில் மாமன்றத் தலைவர் கந்தைய நீலகண்டன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருத்தலத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து ஆன்மீகப் பேழை ஊர்வலமாக மாமன்ற தலைமையகத்திற்கு எடுத்து வரப் படவுள்ளது. தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

சைவ ஆகமப் பிரதியை கொண்ட வன்ற கட்டுப் பேழையை வணக்கத்திற்குரிய ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் வழங்கி வைக்க மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மனித நேயமாமணி இந்து சிரோரத்தினம் வி.கயிலாசப்பிள்ளை பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் **சைவ ஆகமங்களில் திருமுறைகளின் சிறப்பு** என்ற கருப்பொருளில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் கருத்துரையாற்றவுள்ளார். (அ-5)





மண்ணில்:
26.08.1946

விண்ணில்:
03.03.2012

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
V.S. சுவாமிநாதன்
(இலங்கை திட்டமிடல் சேவை - விசேட தரம்)

ஓராண்டு ஓடி மறைந்தது
நினைவுகள் மட்டும் மறையாமல்
எங்கு சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் நிழலாய் தொடர்கிறது

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

'திருவேரகம்',
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 5,300 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இரு மாதத்தில் இனங்காண்பு

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் 5ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 55 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. கொழும்பு, குருநாகல், கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (அ-2)

## தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் - வைகோ



இலங்கையில் ஈழ விடுதலைக்காக இளைஞர்களும் மாணவர்களும் முன்வர வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ கேட்டுக் கொண்டார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலர் கைகோ பூரண மதுவிலக்குப் பிரசார நடைபயணத்தை கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி கோவளத்தில் ஆரம்பித்தார்.

கடந்த 11 நாட்கள் 300 கிலோ மீற்றர் பயணம் செய்து கடந்த 28 ஆம் திகதி மறைமலை நகரில் பிரசார நடைபயணத்தை முடித்துக் கொண்டார்.

மறைமலை நகரில் நடந்த பொதுக் கூட்டத்தில் வைகே உரை நிகழ்த்துகையில், நடைபயணம் மேற்கொண்டபோது ஏராளமான பெண்கள் என்னை சூழ்ந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் எப்படியாவது மதுவை ஒழித்துவிடுங்கள் என கண்ணீர் விட்டு அழுதது என்னைக் கதிகலங்க வைத்தது.

மதுவால் சட்டம், ஒழுங்கு, பாதிப்பு ஏற்படுவது 90 சதவீதம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் மது அருந்துவதால்தான் நடைபெறுகின்றன.

தமிழக அரசு உடனடியாக பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும். தொடர்ந்து கடைகள் நடத்தி வந்தால் மக்கள் சக்தியை திரட்டி போராடி வெற்றி பெறுவோம்.

இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு சர்வதேசத்தின் மூலம் நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்றார். (அ-2)

## இலங்கைக்கான உதவிகளை இந்தியா அதிகரித்துள்ளது

இலங்கைக்கான உதவிகளை இந்திய மத்திய அரசாங்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் தருணத்தில் மத்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகளை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கைக்கு 290 கோடி ரூபா உதவிகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2013 தொடக்கம் 2014 ஆம் நிதியாண்டில் இலங்கைக்கான உதவிகள் 500 கோடி ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

உள்ளக இடம்பெயர் மக்களுக்கான புனர்வாழ்வு போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த உதவுதொகை பயன்படுத்தப்படவுள்ளது. சார்க் பிராந்திய வலய நாடுகளுக்கான உதவிகளை இந்திய மத்திய அரசாங்கம் உயர்த்தியுள்ளது. (அ-2)

## அமெரிக்க பிரேரணையை ஆராய்கிறதாம் இந்தியா

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது தொடர்பில் இந்திய அரசாங்கம் தீவிர ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

இந்திய ஊடகங்களின் தகவலின்படி அமெரிக்காவின் இந்த பிரேரணையின் பிரதியொன்று இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியாவினால் ஏற்றுக் கொள்ள முடியாத சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மத்திய அரசாங்கத்தின் உயர்மட்ட தகவலொன்றை மேற்கோள்காட்டி த ரைம்ஸ் ஒப் இந்தியா இந்த செய்தியை வெளியிட்டிருந்தது.

இதன்படி பிரேரணையில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் இந்தியா அமெரிக்காவிடம் சீர்திருத்தங்களை எதிர்பார்க்கலாம் என்று கூறப்படுகின்றது.

கடந்த வாரம் இந்த பிரேரணைக்கு இந்தியா சாதகமாக வாக்களிக்கும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்திருந்த போதும் அது உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## நடைபெற்று முடிந்தது செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வடமாகாணத்தைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இரு நாட்கள் வதிவிடச் செயலமர்வு அண்மையில் நல்லூர் திவ்ய ஜீவன் சங்க மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்றது.

இச்செயலமர்வானது ஆசிரியர்களின் கற்பித்தல் வாண்மையினை உயர்த்தும் முகமாகவும் மாணவர்களின் எதிர்கால நலனில் ஆசிரியர்களின் வகிபங்கை உயர்த்தும் முகமாகவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான இலவச சீருடைகள், இலவச பாடப்புத்தகங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்துசமய கலாசார திணைக்களத்தில் இதுவரை ஆயிரத்து 600 பாடசாலைகள் நாடு தழுவிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் யாழ்.மாவட்டத்தில் மட்டும் சுமார் 210 பாடசாலைகள் வரை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ

## கொலை குற்றவாளிக்கு மரண தண்டனை தீர்ப்பு

கொலை குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு மாத்தறை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இதற்கமைய திக்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞனுக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில் திக்வெல்ல குருந்து பொக்குண பகுதியில் இந்த கொலைச் சம்பவம் இடம் பெற்றிருந்தது.

ஒருவரை சுட்டுக் கொலை செய்ததுடன் மற்றையவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு காயப்படுத்தியதாக பிரதிவாதிக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (அ-2)

## பிரபல அமைச்சருக்கே மரண பயம் ஏற்பட்டுள்ளது

### சிந்திக்க கோருகிறது ஜே.வி.பி.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் மரண பயம் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹிங்குராங்கொட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பிரபல அமைச்சருக்கு மரண பயம் ஏற்பட்டால் இந்த நாடு எவ்வாறான ஓர் பயணத்தை மேற்கொள்கின்றது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

மரண அச்சுறுத்தல் விடுத்தவர்கள் பற்றி அமைச்சர் குறிப்பிடவில்லை. எனினும் இந்த நாட்டின் மிகவும் முக்கியமான பிரபல குடும்பத்தை பற்றித்தான் அமைச்சர் இவ்வாறு மூடி மறைத்து குறிப்பிடுகின்றார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து 43 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. அவ்வாறான ஓர் சிரேஷ்ட உறுப்பினருக்கு மரண பயம் ஏற்பட்டுள்ளது என்றால் அது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நாட்டின் செல்வங்கள் மிகச் சொற்பளவிலான சில குடும்பங்களிடையே பகிரப்பட்டுள்ளது. அப்பாவி விவசாயிகள் வறுமைக் கோட்டுக்கும் கீழ் வாழ்க்கை நடத்துகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## நானாட்டானில் நெல் அமோக விளைச்சல்

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விவசாய கிராம மக்கள் கடந்த டிசெம்பர் மாதம் பயிரிடப்பட்ட பெரும்போக நெற்பயிர்ச் செய்கை ப்ாரிய அழிவுகளின் மத்தியில் காப்பாற்றப்பட்ட நிலையில் போதிய விளைச்சலின் மத்தியில் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கின் காரணமாக மாவட்டத்தில் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்பயிர்ச்செய்கையில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் எஞ்சிய நெற்பயிர்கள் காப்பாற்றப்பட்டு தற்போது அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் தற்போது பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் நெல்லின் விளைச்சல் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## வியட்நாம் தூதுக்குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்

வியட்நாம் தேசிய சட்டமன்ற துணைத் தலைவர் நகுயென் தி கிம்கான் தலைமையிலான தூதுக்குழுவினர் இலங்கையை வந்தடைந்துள்ளனர். இலங்கைக்கு வருகை தந்த இக்குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த 28 ஆம் திகதி அலரிமாளிகையில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது பயங்கரவாதப் பிடியிலிருந்து மீண்டெழுந்து துரித முன்னேற்றமடைந்துவரும் இலங்கையைக் கண்டு தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் இரு நாடுகளுக்கிடையில் உள்ள நல்லுறவுகள் மேலும் வலுப்பெற வேண்டும் என்றும் தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இலங்கைக்கான தூதுவர் டொன் சின் தான், இலங்கை பாராளுமன்ற செயலாளர் டபிள்யூ.பி.டி.தஸநாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது கலந்து கொண்டனர். (அ-2)





யாழ்.கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் அணி நடையினை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவருக்கு சான்றிதழ் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையைக் கொன்று கைச்சுளகால் மூடினாளாம். -தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## நீ எதனால் அளக்கின்றாயோ அதனால் நீ அளக்கப்படுவாய்

இலங்கை விவகாரம் ஜெனிவாவில் சூடு கிளப்பியுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசு தொடர்பில் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக் களுக்கு மறுத்தான் கொடுப்பதில், ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரச பிரதிநிதிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கூடவே நவநீதம்பிள்ளை முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என ஐக்கிய தேசியக் கட்சியும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவற்றின் மத்தியில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவா மாநாட்டில் அமெரிக்கா முன்வைக்கவுள்ளது.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளிகள் இலங்கை அரசின் முகத்தில் கரியைப் பூசி வருகிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டமை இலங்கைப் படைகளுக்கு அவப் பெயரை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

போர்க்களத்தில் எடுக்கப்பட்ட காணொளிக் காட்சிகள் பார்ப்போரை நெக்குருக வைக்கின்றன.

இப்படியொரு கொடூரமா? என்ற கேள்விகளின் மத்தியில்,

காணொளி பொய், நவநீதம்பிள்ளை கூறுவது பொய் ஒட்டுமொத்தத்தில் எல்லாமே பொய் என்பதாக இலங்கை அரசு கூறுகின்றது.

காலக்கிரமத்தில் நானும் பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்... என்றவாறான ஓர் முடிபை இலங்கை அரசு எடுத்துக் கொண்டால்,

வன்னிப் போர் நடந்தது பொய், புலிகள் என்ற அமைப்பு இருந்தது பொய், பாலச்சந்திரன் என்பதே பொய் என்று கூறினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்னதான் யார் கூறினாலும் உள்ளது இல்லதாகாது. இல்லது உள்ளதாகாது என்ற சற்காரிய வாதத்தை எவரும் ஓரம்கட்டிவிட முடியாது.

பொய் உரைத்து தப்பித்துக் கொள்வதைவிட, உண்மைகளை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ற நிவாரணங்களை தேடிக் கொள்வது உத்தமமானது.

மாறாக பொய் கூறி குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் தன் நெஞ்சைச் சுடுகின்ற மிக மோசமான ஒரு நிலைமை ஏற்படுகின்ற பொழுது இந்த உலகமும் லௌகீக வாழ்வும் வெறுப்பாகும்.

ஆக, குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று யாரேனும் நினைத்தால் அது மிகப்பெரும் தவறாகும்.

**நீ எதனால் அளக்கின்றாயோ அதனால் நீ அளக்கப்படுவாய்** என்ற புனித விவிலியத்தின் தத்துவத்தை யாரும் மறந்துவிடாதீர்கள்.

## சமரபாகு கிராமசேவகர் பிரிவு எந்த பிரதேச செயலகத்திற்குரியது?

### மக்கள் கேள்வி

(கரவெட்டி)

கொற்றாவத்தை சமரபாகு கிராம அலுவலக பிரிவு வடமராட்சி தெற்கு மேற்கு செயலகத்துக்கா அல்லது வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்துக்கா உரிமையென்ற விவாதத்திற்கு நில அளவைகள் திணைக்களத்தின் வரைபடத்தின் மூலமே உறுதிப்படுத்த முடியும்.

கொற்றாவத்தை சமரபாகு கிராமத்தை இரு பிரதேச செயலகங்கள் உரிமைகோரி வருவதனால் அப்பகுதி மக்கள் பல ஆண்டு காலமாக பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இக்கிராமம் எப்பிரதேச செயலகத்திற்குட்பட்டது என அறிந்துகொள்ள 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள வரைபடத்தை ஆராயவேண்டும்.

1990ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களத்தினால் இக் கிராமத்தின் எல்லை நிர்ணயம் வரைபடம் வரையப்பட்ட பின் 1990ஆம் ஆண்டு மீள் பதிவு செய்யப்பட்ட வரைபடத்தின் மூலமே எப்பிரதேச செயலகத்திற்கு உரித்தானது என அறியமுடியும்.

எனவே இப்பிரதேச மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு கொற்றாவத்தை சமரபாகு கிராம அலுவலர் பிரிவு பிரச்சினையை மிக விரைவில் தீர்க்க வேண்டுமென அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

## பொதுக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கத்தின் 3 ஆவது பொதுக் கூட்டம் எதிர்வரும்14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் ஓய்வுபெற்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் கி.யோகேந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி உசா சுபலிங்கம், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-19)

## தங்க பிஸ்கட்டுக்கள் அரசுடைமையாகின

தங்க பிஸ்கட்டுக்களை காலில் ஒட்டி இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் பெறுமதி சுமார் 14 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.


சென்னை நோக்கி செல்லவிருந்த இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆடை வியாபாரியான குறித்த நபர் இலங்கை- இந்தியாவிற்கிடையில் தொடர்ச்சியான பல பயணங்களை மேற்கொண்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரி ஜீ.ஜீ. பிரேமசிறி தெரிவித்தார்.

இவரின் வலது காலில் 100 கிராம் எடையுடைய இரண்டு தங்க பிஸ்கட்டுக்கள் இருந்ததாக குறித்த அதிகாரி குறிப்பிட்டார். தங்க பிஸ்கட்டுக்கள் இலங்கை அரசுடைமையாக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டு இந்திய பிரஜை நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். (அ-2)

### தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

**இன்பம் எது**



யாவருஞ் சமமென முணர்ந்திட லின்பம்
யாவரும் சகோதர ரென்பது மின்பம்
யாவரு நலனுற வுழைத்திட லின்பம்
யாவரு மொன்றென மொன்றிட லின்பமே

பணிதலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணிபயன் கருதா தாற்றிட லின்பம்
பணிமுயன் றாற்றி முற்றுற லின்பம்
பணியெலாம் சிவபணி யாக்கிட லின்பமே

## நமது நாளாந்த வாழ்வு இறைவனுக்கும் பிறருக்கும் கனிதருவதாக அமையவேண்டும்

பாவிகள் மனம் மாறாவிட்டால் அழி வர் என்று கூறுகிறார். அத்துடன் இயேசு அத்தி மரம் பற்றி ஒருகதை கூறுகின்றார். ஒருவர் தம் திராட்சைத் தோட்டத்தில் உள்ள அத்திமரத்துக் கனியைத் தேடிய போது எதுவுமில்லை. எனவே அவர் தோட்டத் தொழிலாளரிடம் பாரும் மூன்று ஆண்டுகளாக இந்த மரத்தில் கனியைத் தேடி வருகின்றேன் எதையும் காணவில்லை. ஆகவே இதை வெட்டி விடும். இடத்தை ஏன் அடைத்துக் கொண்டிருக்கவேண்டும்? என்றார்.

தொழிலாளர் ஐயா! இந்த ஆண்டும் இதை விட்டுவையும். நான் இதைச் சுற்றிலும் கொத்தி எரு போடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி இல்லையானால் இதை வெட்டி விடலாம் என்று அவரிடம் கூறினார்.

### பரமபிதா காட்டிய பாதை

இந்த அத்திமரக் கதையில் , உரிமையாளர் தொழிலாளிடம் ஒரு புகார் சொல்கின்றார். இம்மரத்தை வெட்டி விடும். அவ்வாறே கனிதராத ஒவ்வொரு கத்தோலிக்கரும் இந்த உலகில் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வாழ்விலும் அப்படியேதான். எத்தனையோ ஆண்டுகள் நாம் கனி தராமல் இருந்தால் இறைவன் ஏமாற்றமே அடைவார்.


எனவே இந்தத் தவக்காலத்தில் நாம் மனமாற்றம் பெறுவோம். நம்முடைய வாழ்வு கனிதருவதாக அமையட்டும். நம்முடைய வாழ்வில் நற்செயல்கள் பெருகட்டும். நம்முடைய வாழ்வு இறைவனுக்கும் பிறருக்கும் கனி தருவதாக அமையவேண்டும்.

நம்மைவிட மற்றவர்கள் பெரிய பாவிகள் என்று நம்மால் உறுதியாகக் கூற முடியாது. மனிதர் சாத்தானின் தூண்டுதலால் தவறான வழியில் செல்பவர்கள். நமக்காகவே உடைந்த இயேசுவின் பாவமற்ற மனம், பாவ வழியில் செல்பவர்களை புனிதமாக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒரு மனிதனின் ஆன்மா அழிவுப் பாதையில் செல்வதை நினைத்து நாம் வருந்துவதில்லையென்றால், நாம் பாவம் செய்கிறோம். எங்களுக்கு எதிராக பாவம் செய்தவர்கள் அனைவரும் அத்தி மரத்தைப் போன்றவர்கள். எங்களால் அவர்களைக் கேட்ட வைக்க முடியும். நாங்கள் அவர்களுக்கு உரம் போடவேண்டும். எங்கள் நடவடிக்கைகள் மூலமும் எங்கள் வார்த்தைகள் மூலமும் அவர்களுக்கு நாங்கள் உரமாக இருக்க வேண்டும். சரியான திசையில் அவர்களைச் செலுத்த நாங்கள் பணிவுடனும் கனிவுடனும் அறிவுறுத்த வேண்டும்.

இயேசு கனிகொடாத மரத்தை அதிக நாட்கள் வைத்திருக்க விரும்பவில்லை. நம் மால் செய்ய முடிந்ததெல்லாம் செய்தும் தீயவர்கள் மனம் திரும்பவில்லை என்றால் அந்த மரத்தை வெட்டி விடுவது தான். அதாவது அவர்களை விட்டு விலகி விடுவது அல்லது சரியான அதிகாரத்தில் இருப்பவரிடம் இந்தப் பிரச்சினைகளை காட்டி அவர்களின் தீமைகளுக்கு சரியான தண்டனை கிடைக்க ஏற்பாடு செய்தலே ஆகும். இதனையும் மிகவும் கனிவுடனும் பெருமையுடனும் செய்யவேண்டும். உரம் கொடுத்தும் நல்ல கனிகளை தரவில்லையென்றால் அந்த மரம் கீழே விழுந்து மக்கி மற்றைய புதிய தாவரங்களுக்கு உரமாக இருக்கட்டும்.

பாவிகள் மனம் மாறாவிட்டால் அழிவர் என்று கூறுகின்றார். மனமாற்றத்திற்கான அழைப்பை விடுக்கும் தவக்காலம் மக்கள் வரலாற்றை வாசிக்கவும் துன்பங்களை விசுவாசக் கண்கொண்டு நோக்கவும் வலியுறுத்துகின்றது. இன்றைய நமக்குத் தரப்படும் வேதாகமப் பகுதியிலிருந்து இந்தப் பாடத்தையே நாம் கற்றுக் கொள்கிறோம்.

சிலர் இயேசுவிடம் தீமை, இறைவன் அனுப்பும் தண்டனை என்ற கோணத்தில் பிலாத்துவின் கட்டளையின் பேரில் சில கலிலேயர்கள் ஆலயத்தினுள் கொல்லப்பட்டது, சிலோவாமில் கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேர் இறந்தது பற்றிய பைபிள் பகுதியை மேற்கோள்காட்டி கேள்வி கேட்ட போது இயேசு கடவுள் நல்லவர்; யார் மீதும் தீமை வருவதை அவரால் விரும்ப முடியாது என்று பதில் கூறியதையும் காட்டுகிறது.



இக் கலிலேயருக்கு இவ்வாறு நிகழ்ந்ததால் இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும் விடப் பாவிகள் என நினைக்கிறீர்களா? என்று குறுக்குக் கேள்வி கேட்கிறார்.

அப்படியல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம்மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள். ஒருவர் எதிர்கொள்ளும் துயரச் சம்பவங்கள் அவர் தனது சொந்தத் தவறுகளுக்காக உடனடியாக அனுபவிக்கும் தண்டனைகள் என்ற கருத்தை இயேசு எச்சரிக்கிறார். அடுத்தவனைப் பற்றி பேசும் போது அவனது பெருமை, திறமை, நன்மைகளைப் பேச வேண்டும். எம்மைப் பற்றிப் பேசும்போது எமது பலவீனங்கள், தவறுகள், குறைகளை மனதில் கொள்ள வேண்டும். இரண்டையும் செய்யும்முன் இறைவனை எம்முன் நிறுத்திக்கொள்ள வேண்டும். இயேசு சொன்ன சொற்கள் எல்லோரும் பாவிகள், எல்லோரும் குற்றவாளிகள். மனமாற்றம் பெறுதலே அழிவிலிருந்து காத்துக் கொள்ள சிறந்த வழி.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

பாவிகள் தீமையை விட்டு விலகி அவரன்பில் வளரவும் மற்றவர்கள் அருளின் மகிழ்வில் வாழ நாம் உதவவும் இறைவன் விரும்புகிறார். தனது மக்களுக்கு எப்பொழுதும் நல்லதையே விரும்பும் இறைவன் அம்மக்கள் மேலான நன்மைகளை கண்டு பிடிக்கும் வண்ணம் வேதனைகளை அனுபவிப்பது தமது அன்பின் நமது அறிவுக்கு எட்டாத திட்டத்தின் ஓர் அங்கமாக சில வேளைகளில் அனுமதிக்கிறார் இத்தவக்காலத்தில் இத்தகைய சம்பவங்கள், இறைவன் இன்றி நாம் வாழ முடியும் என்ற மாயையை வெற்றி கொள்ளவும் கடவுளின் துணையோடு அது குறித்து நாம் சிந்திப்பதற்கும் வாய்ப்பளிக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளாக்கின் நிதானமான ஆட்டத்தால் ஆஸி. 237/9

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ராஜீவ்காந்தி விளையாட்டரங்கில் கடும் பாதுகாப்பின் மத்தியில் ஆரம்பமாகியது.

இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. சென்னை டெஸ்டில் விளையாடிய வீரர்களே இடம்பெற்றிருந்தனர்.

அவுஸ்திரேலிய அணியில் இரண்டு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. லயனுக்கு பதிலாக டோகர்ட்டி சேர்க்கப்பட்டார். இதேபோல வேகப்பந்து வீரர் ஸ்டார்க் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக சகலதுறை வீரர் மேக்ஸ்வெல் சேர்க்கப்பட்டார்.

நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


ஆரம்ப வீரர்களாக வோர்னரும், எட்கோவனும் களம் புகுந்தனர். புவனேஸ்வர்குமார் வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரில் 4ஆவது பந்தில் வோர்னர் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கை தொடங்கினார். ஆட்டம் தொடங்கி சிறிது நேரத்தில் புவனேஸ்வர்குமாரின் 2ஆவது ஓவரில் வோர்னர் 6 ஓட்டங்களுடன் 'போல்ட்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். புவனேஸ்வர்குமார் டெஸ்டில் கைப்பற்றிய முதல் விக்கெட் இதுவாகும். அறிமுகமான சென்னை டெஸ்டில் அவர் விக்கெட் எடுக்க வில்லை. வோர்னர் ஆட்டம் இழந்தபோது அவுஸ்திரேலியா 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

2ஆவது விக்கெட்டுக்கு எட்கோவனுடன், ஹியூக்ஸ் ஜோடி சேர்ந்தார். சிறிது நேரத்தில் மற்றொரு தொடக்க வீரரான எட்கோவனும் ஆட்டமிழந்தார். அவர் 4 ஓட்டத்துடன் புவனேஸ்வரகுமார் பந்தில் எல்.பி. டபிள்யூ மூலம் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 15 ஆக இருந்தது. அடுத்து வந்த வொட்சன் சிறிது நேரம் தாக்குபிடித்து 23 ஓட்டங்கள் பெற்ற நிலையில் புவனேஸ்வர்குமார் பந்தில் எல்.பி.டபிள்யூ மூலம் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய கிளார்க் ஹியூக்ஸ் உடன் ஜோடி சேர்ந்து 21.2 ஓவர்களில் அணி 63 ஓட்டங்களை பெற்ற போது ஹியூக்ஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். அணி 63 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகளை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தபோது களமிறங்கிய வேட் அணித் தலைவர் கிளாக்குடன் இணைந்து சிறந்த இணைப்பாட்ட மொன்றை வழங்கினார். இருவரும் தமக்கிடையில் 145 ஓட்டங்களை பகிர்ந்தனர். வேட் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்னர் வந்த வீரர்கள் குறுகிய ஓட்டங்களுடன் நடையைக் கட்ட அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

ஆஸி அணிக்காக தனித்து நின்று போராடிய அணித் தலைவர் கிளாக்1 சிக்ஸ், 9 பவுண்டரிகளுடன் 91 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் புவனேஸ்வர்குமார், ஜடஜா தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும், அஸ்வின் 1 விக்கெட் டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடும் இந்திய அணி நேற்றைய நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இன்று 2 ஆம் நாள் ஆட்டம்.



# இலங்கை தோல்வி

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் பெண்கள் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் சார்பாக உப தலைவி இஷானி கௌஷல்யா 22 பந்துகளில் 25 ஓட்டங்களையும், டிலானி மனோதரா 25 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷகெரா செல்மன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ட்ரெமெயின் ஸ்மார்ட், ஸ்ரஃபானி ரெய்லர், சுப்றினா முன்றோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

88 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து இறுதிப்பந்தில் வெற்றிபெற்றது.

இறுதிப்பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட, அவ்வணியின் தலைவி மெரிஸா அகுய்லெய்ரா நான்கு ஓட்டமொன்றை அடித்து அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் மேற் கிந்தியத் தீவுகள் அணி சார்பாக மெரிஸா அகுய்லெய்ரா 39 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், ஸ்ரஃபானி ரெய்லர் 34 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக இஷானி கௌஷல்யா 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சாமனி செனவிரத்ன, ஷஷிகலா சிரிவர்தன, ஒடிஷா றணசிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

# ஆனந்த் தோல்வி



சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் ஜூரிச் செஸ் சேலஞ்ச் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இப் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் உள்பட 4 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். முதல் 3 சுற்றுகளும் சமநிலையில் முடிவடைந்த நிலையில் 4ஆவது சுற்று ஆட்டம் நடந்தது. இதில் இத்தாலியின் பேபியானோ கருணாவிடம் ஆனந்த் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். விளாடிமிர் கிராம்னிக்-போரிஸ் கெல்பான்ட் ஆகியோருக்கு இடையிலான போட்டி கடும் போராட்டத்துக்கு பிறகு சமநிலையில் முடிந்தது.

விளாடிமிர் கிராம்னிக், போரிஸ் கெல்பான்ட் ஆகியோர் தலா 2 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தை பகிர்ந்துகொண்டுள்ளனர். ஆனந்த்தை வீழ்த்தியதன் மூலம் கருணா 2.5 புள்ளிகளுடன் தனி முன்னிலை பெற்றுள்ளார். இன்னும் 2 சுற்றுகள் மட்டுமே மீதம் உள்ள நிலையில் கருணா சம்பியன் பட்டம் வெல்ல அதிக வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது.


# போட்டிகள் குறைப்பு

சர்வதேச கிரிக்கெட் சபையின் எதிர்கால சுற்றுப்பயண திட்டத்தின் படி இந்திய அணி அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாட வேண்டும்.

அதன்படி இந்திய அணி நியூசி லாந்துடன் 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டி மற்றும ஒரே ஒரு டி20 ஆட்டத்தில் விளையாட திட்டமிட்டு இருந்தது. இந்த சுற்றுப்பயணத்தை முழுமையாக இருக்காமல் பாதியாக குறைக்க இந்தியா விரும்புகிறது.

அதன்படி இந்திய அணி நியூசிலாந்துடன் 2 டெஸ்ட், இரண்டு ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு ரி20 போட்டியில் விளையாட முடிவு செய்துள்ளது.

# பாகிஸ்தானின் தோல்விக்கு காரணம் உருது மொழியா..?



தென்னாபிரிக்காவுக்கெதிரான 3 டெஸ்ட் போட்டிகளிலும் பாகிஸ்தான் படுதோல்வியடைந்ததையடுத்து பாகிஸ்தான் பயிற்சியாளர் டேவ் வாட்மோர் மீது அதிருப்தி எழுந்துள்ளது.

பெரும்பாலும் உருது மொழியையே பேசும் வீரர்களிடத்தில் வாட்மோரால் சரியாக தொடர்பு படுத்திக் கொள்ள முடியவில்லை எனவே வாட்மோர் உருது கற்கவேண்டும் என்று அவருக்கு ஹனீப் மொகமட் அறிவுரை வழங்கியுள்ளார்.

பெரும்பாலான பாகிஸ்தான் வீரர்கள் ஆங்கிலத்தில் அவ்வளவாக உரையாட முடியாது எனவே வாட்மோர் நிச்சயம் உருது கற்றுக் கொண்டால் மட்டுமே அவரால் சிறப்பாக செயற்படமுடியும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருதுகிறது.

இலங்கைக்கெதிராகவும் தோல்வி, தென்னாபிரிக்காவுக்கெதிராகவும் தோல்வி என்பதால் தற்போது வாட்மோர் உருது கற்றுக் கொள்ள வலியுறுத்தப்படுகிறார்.

# திரும்பிப் போகிறது வென்ற தங்கங்கள்

ஒலிம்பிக் போட்டியில் இருந்து ம்ல்யுத்தம் நீக்கப்பட்டதற்கு மல்யுத்த வீரர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ரஷ்யாவை சேர்ந்த மல்யுத்த வீரர் ஸகிட் முர்தாஃஜலீவ் (SAGID MURTAZALIEV) கடந்த 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் வென்ற தங்க பதக்கத்தை சர்வதேச ஒலிம்பிக் சபைக்கு திருப்பி அனுப்பி யுள்ளார்.

ஏற்கனவே பல்கேரிய மல்யுத்த வீரர் வேலண்டைன் யோர்டொனோவ் (VALENTINE YORDONOVE) கடந்த 1996ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வென்ற தங்கப் பதக்கத்தை ஒலிம்பிக் சபைக்கு திருப்பி அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மஸ் வி.கழகத்தின் கால்பந்து இறுதியாட்டம் இன்று





(கரவெட்டி)

வடமராட்சி வதிரி பொம்மஸ் விளையாட்டு கழகத்தின் யாழ்மாவட்ட ரீதியான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் வடமராட்சி விண்மீன் அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச ஊரெழு றோயல்அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பலம்வாய்ந்த இரு அணிகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு களம் இறங்குகின்றன.

இந்தநிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (3-24)

# மகாஜனா கல்லூரி-யாழ்ப்பாணக் கல்லூரி துடுப்பாட்டம் சமநிலையில் முடிந்தது

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் துடுப்பாட்டப் போட்டியொன்று அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 139 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் மதுசன் 69, சோபிநாத் 29 ஆகியோர் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பில் ஜெனந்தன், திலக்சன், ரிசோத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் வீழ்த்தினர். பதிலுக்கு களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அதிகபட்சமாக டிலோசன் 68, ரமேஸ்குமார் 24, கஜந்தன் 22 என்ற ஓட்ட அடிப்படையில் ஓட்டங்களை பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் சோபிநாத் 5 விக்கெட்டுக்களை, நிலக்ஷன், நிமலேந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

2-வது இனிங்சை தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி 191 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அதிகபட்ச ஓட்டமாக அபிராஜ் 56, மதுசன் 25, நிலக்ஷன் 25, ஓட்டங்களை பெற்றனர். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பில் கஜந்தன் 7 விக்கெட்டுக்களையும், ஜெனந்தன், அனுராஜ் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் வீழ்தினர். இதன் அடிப்படையில் 2-வது இனிங்சைத்தொடர்ந்த மகாஜனாக் கல்லூரி அணி ஆட்ட நேர முடியில் 94 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட்டுக்களை இழந்தது. இதில் அதிகபட்ச ஓட்டங்களான மயூரன் 35, திலக்ஷன் 22 ஓட்டங்களை பெற்றனர்.

யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பில் சோபிநாத் 4 விக் கெட்டுக்களை நிலக்ஷன் 3 விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

ஆட்டம் சமநிலையில் முடிந்தது.




## ஸ்ரான்லியிடம் பணிந்தது மானிப்பாய் இந்து

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 19 வயது பிரிவு அணிகளிற் கிடையிலான பிரிவு III இற்கான ஆட்டம் ஒன்றில் ஸ்ரான்லி அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 1, 2-ம் திகதிகளில் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நாணயசுழற்சியில் வென்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலில் துடுப்பாட்ட தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 33.5 பந்துப் பரிமாற்றம் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மானிப்பாய் இந்து சார்பாக சபேசன் 56, நிக்ஸன் 43 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக கலைச்செல்வன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி எதிர் அணியை நிலைகுலைய வைத்தார். தொடர்ந்து முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணியானது 43.4 பந்துப் பரிமாற்றம் நிறைவில் 174 ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஸ்ரான்லி அணி சார்பாக கம்சிகாந் 51 ,பிரசாந் 20 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் இந்து சார்பாக பிரதீபன் ,சேந்தன் நிக்ஸன் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து 2-வது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்து அணியானது ஸ்ரான்லி அணியின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 31.5 பந்துபரிமாற்றம் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

89 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 26.5 பந்துப் பரிமாற்றம் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஸ்ரான்லி அணிசார்பாக கம்சிகாந் அதிரடியாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களை பெற்றார். கலைச்செல்வன் 15 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் மானிப்பாய் இந்து சார்பாக பிரதீபன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

# மனித உரிமைகளை பேணுவதில்...

மனித உரிமை கண்காணிப்பகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட வீடியோ காட்சிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அளித்துள்ள பதில்கள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அந்த அமைப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரித்துள்ளார். அந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் பொறுப்புணர்ச்சியுடன் கவனிக்கும் எனவும், படையினருக்கு வலுவான ஓர் செய்தியை சொல்லும் என தாம் எதிர்பார்த்திருந்த நிலையில் அது சாத்தியப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் அந்த அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்கள் பாதுகாப்பு தரப்பினரால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டனர் எனத் தெரிவித்து மனித உரிமை கண்காணிப்பகம் வீடியோ காட்சிகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தது.

இந்த அறிக்கை தொடர்பிலான அரசாங்கத்தின் ஆரம்பப் பதில்கள் ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான அறிக்கைகளின் மூலம் வெளிநாடுகளில் புகலிடக் கோரிக்கை பெற்றுக் கொள்வது அதிகரிக்கும் என இந்தியாவிற் கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரிய வசம் தெரிவித்துள்ளதாகவும், அவர் மருத்துவ மற்றும் வீடியோ ஆதாரங்களை உதாசீனம் செய்துள்ளதாகவும் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் இருந்தால் அது குறித்து காவல்துறையிடம் முறைப்பாடு செய்ய முடியும் என இராணுவத்தினர் பதிலளித்துள்ளதாகவும், இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை காவல்துறையினர் விசாரணை செய்ய மாட்டார்கள் எனவும் மீனாக்ஷி கங்குலி குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை ; மனித உரிமை கண்காணிப்பகத்தின் அறிக்கையும் வீடியோ காட்சிகளும் போலியானவை என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதனை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்வதாக அமைச்சர் அண்மைய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வலியுறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-1)

# மரண அறிவித்தல்

## நடராசா ஆனந்தராசா



(வாகனப் பெயின்ரர்)

அரசடி ஐந்தாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் முனீஸ் லேன் கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஆனந்தராசா (01.03.2013) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நரசிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பதேவியின் அன்புக் கணவரும், தர்சுஜா, தனுசியா, றதினி, விஜிந்தன், அஜிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன், பிரதீப் ஆகியோரின் அன்பு மாமனும், பர்மிகா, கோடிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும்,

சிவலிங்கம், (வினோஜிகா வேக்சொப் உரிமையாளர்-கந்தர்மடம்), இந்திராணி, ஜெகதீஸ்வரி, குகேந்திரராசா (C.T.B-சாரதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராசா (சுவிஸ்), தவராசா (பிரான்ஸ்), இராசமாணிக்கம், அப்பன் (ஜேர்மனி), ஈஸ்வரி (ஜேர்மனி), புஸ்பராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முனீஸ் லேன்,
கட்டைப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர் (2054)

# 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

சமூக சேவைக்காக
16 . 04 . 1946



இறை சேவையில்
02 . 02 . 2013

## அமரர் எம்.கே.ஜீவகதாஸ்

கடந்த 02.03.2013 சனிக்கிழமை அன்று எம்மை விட்டு பிரிந்த எங்கள் குடும்பத் தலைவனாக, அறவழிப் போராட்டக் குழுவின் ஆரம்பகாலம் முதல் தனது இறுதி மூச்சுவரை செயலாளராக அறவழிப் போராட்டக் குழுவின் செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட அமரர் எம்.கே.ஜீவகதாஸின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவி புரிந்தவர்களுக்கும், அன்னாருக்கு மலர் வளையங்கள், மலர்மாலைகள் வைத்து கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்கள் ஊடாக செய்தியாகவும், கண்ணீர் அஞ்சலியாகவும் பிரசுரித்தவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல், தந்தி, கடிதம் என்பவற்றினூடாக வெளிநாட்டில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் அனுதாபம் தெரிவித்து எமது துக்கத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் மேலும் எமக்குப் பல வழிகளிலும் துணைநின்ற அன்னாரது நண்பர்கள், அன்பர்கள், உறவினர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை 04.02.2013-ம் திகதி திங்கட்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் வீட்டுக் கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை என்பவற்றுடன் அமரரின் நினைவு மலர் வெளியீடும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு ;
சாவகச்சேரி
T.P: 0212210192, 0773144730

அன்பு மனைவி-திருமதி ஈஸ்வரி ஜீவகதாஸ்
அன்பு மகன்- சஞ்ஜீவன்
குடும்பத்தினர்.
(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Study - Work - Live Abroad

Australia, UK, U.S.A, New Zealand, Canada
Swiss, Germany, France, Cyprus, Malta
Russia, Ukraine, Malaysia, Singapore

- Top Ranked Universities
- Entry with G.C.E O/L or A/L
- IELTS Not required **
- Free Accommodation **
- Scholarships Available **
- Free IELTS Classes **
- Credit Transfer to year 2 / 3 available
- Sponsorships Available

Admissions Open for Next Intake 2013

** Conditions Apply

iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060
www.icslanka.com


## இலங்கை...

நீதியரசரை பணி நீக்க எடுத்த முயற்சிகளைஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தியவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தமிழர்...

யன்,லண்டன்பாராளுமன்ற உறுப்பினர்கள், அயர்லாந்துப் பிரதிநிதிகள், மலேசியா, இத்தாலி, பிரான்ஸ், அயர்லாந்து மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர். (செ-11)

## ஜெனிவா...

கையான ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பற்றிய போதிலும், இம்முறை அரசாங்கம் இறுதி நேரத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவை இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இணைத்துக்கொண்டதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## நீரில் மூழ்...

குறித்த மாணவன் நண்பர்களுடன் சேர்ந்து அம்மன் கோவில் கேணிப்பகுதியில் விளையாடிய போதே தவறிவீழ்ந்துநீரில்மூழ்கிஉயிரிழந்துள்ளான். இதுதொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை மேலும் ஒரு சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று காலை ஊர்காவற்றுறை புளியங்கூடல் சின்னமடு அம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தினை சேர்ந்த கிறிஸ்தோப்பர் மதுஷென் (வயது 08) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் நேற்று மதியம் ஒரு மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனையின் பின்னர் மாலை 6 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


### Deutsch, Dutch, French, English

**ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்**

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464
(சி-2568)

### டோகா/கட்டார் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு

- ✔ நல்ல சம்பளம் + மேலதிக நேர வேலை
- ✔ மாதாந்த சம்பளம் 60,000/- மேலதிகமாக

தச்சுத்தொழிலாளர். இரும்பு ஒட்டுநர், குழாய் பொருத்துநர், கட்டடத் தொழிலாளி, மின் இணைப்பாளர், குளிரூட்டி திருத்துநர், உதவியாளர்

CONDITION APPLY

- ✔ உங்களுக்காக 50,000 கடன் வசதி செய்து தரப்படும்.

Supra Foreign
Employment Egancy
In Joint Venture With iCS Study Overseas
தொடர்புகளுக்கு: No: 77, Clock Tower Road, Jaffna. 021 730 6000

### COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி. | M.M.V. வீதி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி. HNB அருகில் Tel. :021-227 0775 |
| சுன்னாகம் | KKS வீதி. ஜெட் மோட்டோஸ். NSB அருகில். Tel. :021-224 1970 |

### யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி

விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக

edCil
INDIAN Education Fair

பிரவேசம் இலவசம்

ON THE SPOT ADMISSIONS

2013 மார்ச் மாதம் 5 மு.ப. 10.30 – பி.ப. 6.30 / 6 மு.ப. 10.30 – பி.ப. 12.00 யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

இந்திய கல்விச் சந்தை உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

ORGANISED BY: edCil — EdCIL (India) Limited, A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY: Consulate General of India Jaffna
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
OFFICIAL TV: Channel Eye

### Malaysia, Work & Study
மலேசிய உயர்கல்விக் கற்கை நெறிகள்,
LINCOLN UNIVERSITY COLLEGE — Lincoln University

- ✱ O/L மற்றும் A/L பரீட்சைகளில் சித்தி எய்திய மாணவர்களுக்கான கற்கை நெறிகள்
- ✱ வேலை செய்து கொண்டே கல்வியைத் தொடரும் வாய்ப்பு
- ✱ இரு வருடங்களின் பின்பு USA மற்றும் Australia பல்கலைக்கழகங்களில் கற்கை நெறியை தொடரும் வாய்ப்பு
- ✱ IELTS பரீட்சை சித்தி தேவையில்லை வங்கி கணக்கு மீதி காட்ட வேண்டிய தேவை இல்லை
- ✱ 30 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறியைத் தொடருவதற்கான பயண ஒழுங்குகள் யாவும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
VTL MANAGEMENT SERVICES (PVT) LTD
No.01, First Floor, Deanston House,
Deanston Place, Colombo - 03.
Tel: 011 720 8752, Mob: 0727685692, Fax: 011 256 5225
Email: vtlmgt@gmail.com Web: vtlmgt.com

குழந்தைகளுக்கான ஆடைகள், கற்பிணிப் பெண்களுக்குத் தேவையான பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் மழலைகளுக்கான புதிய நவீன ஆடைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்




ABI BABY MART
267, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
கலட்டிச் சந்திக்கு அருகில்
(சி-2569)


## 2012 தீர்மா...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட வுள்ளதாக குறிப்பிட்டிருந்தேன்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு இலங்கை இன்னும் அதிகமாக செய்ய வேண்டும் அதனை ஊக்குவிக்கும் வகையிலேயே 2012ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதே இந்த தீர்மானம் கொண்டு வரப்படும்.

இந்தத் தீர்மானமானது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட தனது மக்களுக்கான கடப்பாடுகளை பின்பற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளும்.

இது தான் தீர்மானத்தின் உள்ளடக்கமாகும். இதற்கு நாம் அனுசரணை வழங்கி ஆதரவு அளிப் போம் என்றார். (செ-11)


WESTERN UNION
MMBL Money Master
வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தினை மிக விரைவாய் பெற்றுக்கொள்ள....

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

விரைவு / பாதுகாப்பு / நம்பகத்தன்மை

கனடாவுக்கான சாதாரண கட்டணம் 550 ரூபாய்

- சகல நாடுகளுக்குமான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது
- கடல் உணவு, மருத்துவப் பொருட்கள், எண்ணெய் வகை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்
- பொதிகள் 3-5 நாட்களில் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

11 கிலோ மேற்பட்ட பொதிகளுக்கு 1 கிலோ கட்டணம்

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி (H.N.B அருகாமையில்)
TCN EXPRESS 2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு. 06. (Nolimit அருகாமையில்)

திருமுருகன் கொம் நெற்
எமது நிறுவனம் பழைய இடத்திற்கு முன்பாக (ஆல் சிலோன் புத்தகசாலை அருகிலுள்ளது)
இல. 208 A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P:: 021 222 7835

| | |
|---|---|
| UK -700/-, | France - 800/- |
| Germany - 800/-, | Australia- 850/- |
| Canada -975/-, | Swiss - 900/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.